தமிழ்நெறிக் கரணங்கள்

இரா.இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

தமிழ்நெறிக் கரணங்கள்

(கரணங்கள் = சடங்குகள்)

ஆசிரியர்
இரா. இளங்குமரன்

வெளியீடு
திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101

நூற்குறிப்பு

நூற்பெயர்	**தமிழ்நெறிக் கரணங்கள்**
ஆசிரியர்	**இரா. இளங்குமரன்**
முதற்பதிப்பு	2003
தாள்	18.6 கி. ஜே.கே. வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/16 கிரவுன்
பக்கம்	80
படிகள்	1000
விலை	உரு. 30/-
நூலாக்கம்	பாவாணர் கணினி 2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17. தொ.பே. 2433 9030
அட்டை வடிவமைப்பு	பிரேம்
அச்சு	Prompt Offset Printers 34, திப்புத் தெரு, சென்னை - 600 014
கட்டமைப்பு	இயல்பு (சாதாரணம்)
வெளியீடு	**திருவள்ளுவர் தவச்சாலை** திருவளர்குடி (அல்லூர்) திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101

உரிமைப் படையல்

இயற்கையொடு பொருந்திக் கரவில்லாமல் மாந்தர் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. அத் தொல் பழங்காலத்திலே இயல்பாகத் தோன்றிய காதல் வாழ்வு சிறந்தோங்கியது. சாதி சமயப் பிரிவோ ஏமாற்றோ இல்லாமையால் காதலித்த ஒருவனும் ஒருத்தியும் திருமணம் செய்து கற்பு வாழ்வு கொள்ளத் தவறியது இல்லை. நெஞ்சக் கலப்பே கலப்பாக வாழ்ந்த நேய வாழ்வு அது.

காலம் செல்லச் செல்ல அருவி நீரிலும் அழுக்குப் படிவது போலவும், விண்வெளியிலும் மாசு ஏற்படுவது போலவும் மாந்தர் வாழ்விலும் மாசு உண்டாவதாயிற்று. அந் நிலையில், அறம் என்பது அள்ளிக் கொடுப்பது அன்று; அருந்தொண்டும் அன்று; அவற்றுக் கும் மூலமாகிய 'மனமாசு இல்லாமையே' என்று வலியுறுத்தும் வகையால்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்"

என்றார் திருவள்ளுவர்.

மனமாசு இல்லாவிடின் வேறு மாசுகள் தோன்றா என்பது அவர்தந்த அறத்தின் வரையறை.

மனத்தில் இருக்க வேண்டிய அறம், மண வாழ்வுக்கு இன்றி யமையாதது அல்லவா! அதனால், மணத்தின் - மனக்கலப்பின் - தொடக்கமே 'அறம்' எனப்பட்டது.

ஒருவன் ஒருத்தியையோ, ஒருத்தி ஒருவனையோ காதல் கொள்ளும் மனஒன்றிப்பே 'அறம்' என நம்முன்னவரால் ஆணை வகையால் கூறப்பட்டது. அவ்வாணை தவறி நடப்பின், மழை வளம் குன்றும் என்றும், விளைவு நலம் அறும் என்றும் கூறினர்.

ஒருத்தி ஒருவனைக் காதலிக்கிறாளா இல்லையா என்பதை அறிந்து கொள்ள ஒரு தேர்வு முறை அவர்கள் கண்டனர். அது அகத்துறையில் 'பிறை தொழுதல்' எனப்படும்.

“இதோ பிறை தோன்றுகின்றது; நாம் வணங்குவோம்” என்று தலைவியிடம் கூறுவாள் தோழி. ‘சரி’ என்று தலைவி பிறையை வணங்குவாள் எனின், அவள் எவரையும் காதல் கொள்ளவில்லை என்றும், வணங்க மறுத்தால் யாரையோ காதலிக்கிறாள் என்றும் அறிந்து கொள்வாள். அவள் காதல் வெற்றி பெறுதற்கு வேண்டும் துணையாக நிற்பாள். வெற்றியும் தேடிவைப்பாள் தோழி.

தலைவி காதலித்த தலைவன் ஒருவன் இருக்க, அவனை விடுத்து வேறொருவனுக்கு மணவுரிமை கேட்டு அவன் உறவினர் மணமகள் உறவினரை நாடிவரும்போது, உண்மை உரைத்துக் காதலைக் காக்கும் தோழியின் செயல், ‘தோழி அறத்தொடு நிற்றல்’ எனப்படும்.

தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்பாள். அதன்பின் தோழி அவள் தாயாகிய செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். அச் செவிலி பெற்றதாய்க்கு அறத்தொடு நிற்பாள் பெற்றவள் தன் துணைக்கும் மக்களுக்கும் அறத்தொடு நிற்பாள். அவ்வகை யால் காதல் அறம் கற்பறம் ஆகும். அதற்கு இடையூறு ஏற்படும் எனின், காதலறம் காப்பதற்காக ‘உடன்போக்கு’ (தலைவனும் தலைவியும் கூடிப்போதல்) நிகழவும். தோழி, செவிலியர் அதற்கு உதவுவர். இவையெல்லாம் காதலறக் காவல் கடமைகளாகச் சான்றோர்களாலும் அறிவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுப் போற்றிவந்த நெறிமுறைகள் ஆகும்.

இவ்வற வாழ்விலும் ஓரீர் இடங்களில் சில பல நிலை களில் தன்னல மாசுகள் உண்டாயின; தடுமாற்றங்கள் ஏற்பட்டன; சொல்லியது பொய்க்கவும், சொல்லாதது நிகழவும் கண்ட சான்றோர் இக்காதல் அறத்திற்கு ஒரு ‘கட்டளைக்கல்’ வேண்டும் என்று கண்டனர். அதற்குக் ‘கரணம்’ என்று பெயரிட்டனர். கரணமாவது சடங்கு.

இதனைத் தொல்காப்பியர்,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.”

என்றார் (1091)

அவர் காலத்திற்கு முன்னரே இக்கரணமுறை ஏற்பட்டு விட்டமையால் ‘என்ப’ என்றார்.

இனி, 'ஐயர்' என்பது பெருமைக்குரியவர் என்னும் பொருளது.

ஐ என்பதற்குத் தலைவன், தந்தை, தாய் ஆசான் என்னும் பொருள்களும் முன்னமே உண்டாகியிருந்தன.

"என் ஐ முன் நில்லன்மின்"

என்பதில் வரும் 'ஐ' தலைவன், அரசன் என்னும் பொருளது.

ஐயன் = அப்பன்; தம் ஐயன்; தமையன் = அண்ணன்.

ஐயை = தாய், தாயைப் பெற்ற தாய், (ஐ+ஐ)

கண்ணப்பரும், நந்தனாரும், திருநீலகண்டரும் சேக்கிழாரால் ஐயர் எனப்பட்டனர்.

ஐயர் வீட்டில் இருக்கிறார்; தோட்டத்திற்குப் போயிருக் கிறார் என அப்பாவைச் சுட்டுதல் உழவர் குடி வழக்கு.

ஐயா என்பது தாத்தாவைக் குறித்தல் செட்டிநாட்டு வழக்கு. வீர சைவம், பெருமக்களை ஐயா ஐயர் என்றே வழங்கும்.

ஐயருக்கு இம்மண்ணின் மதிப்பு வாய்த்திருத்தலை அறிந்த அயலிடத்தார், தம்மை 'ஐயர்' என்று கொண்டனர். கீழை ஆரியர் கொண்ட இவ் வழக்கத்தை, மேலை யாரியர்களும் மேற்கொண்ட வழக்கமே கால்டுவெல் ஐயர், போப்பையர் முதலிய பெயர்களாம். "ஐயரென்றும் துரையென்றும் எனக் காங்கிலக் கலை பயில்வித்த பொய்யர்" என்றார் பாரதியார்.

ஐயரே அன்றிப் பார்ப்பார், அந்தணர், குருக்கள், பண்டாரம், பூசாரி - என்பாரும் மதிக்கப்பட்ட தமிழர்களே ஆவர். அவர்களின் தூய தமிழ்ப் பெயர்களே நல்ல அடையாளம் ஆகும்.

ஆதலால், பொதுமையும் பெருமையும் தகுதியும் அமைந்த அப்பெயரைச் சாதிப் பெயராகக் காட்டிக் கொள்ளல் தந்நலக் குறியாம். நிற்க.

மணவாழ்வில் ஒழுக்கத் தவறு உண்டாதலை அறிந்து அதனை விலக்க உயர்ந்தவர்கள் வகுத்தமைத்து நடைமுறைப் படுத்தியதே 'கரணம்' என இவண் அறிதல் வேண்டும்.

ஒரு கரணம் நிகழ்கிறது. அக்கரணத்தில் செய்யப்படுவது என்ன? சொல்லப்படுவது என்ன? ஏன் இதனை இவ்வாறு செய்ய வேண்டும்? - என்பவை புரிய வேண்டும் அல்லவா! கரணம்

எவர்க்குச் செய்யப் படுகிறதோ அவர்க்குப் புரிய வேண்டும் என்பது உலகத்து அறிவாளர் அனைவரும் - வாழ்வுடையவர் எவரும் - ஒப்புக் கொண்ட நடைமுறை. ஆனால் வியப்பினும் வியப்பாகச் சடங்கு செய்பவனுக்கும் பொருள் புரியாத-செய்யப் படுபவனுக்கும் எதுவுமே புரியாத - அயன்மொழி வழியே, தெய்வமொழி என்னும் ஏமாற்று முறையால் வடமொழியில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன, இங்கு நிகழும் சடங்குகள்.

கரணம் செய்பவர்கள் தங்களை உயர்ந்தவர்களாகத் தக்க வைத்துக் கொள்ளவும், கால மெல்லாம் தந்நலத்திற்காக வாழவே திட்டமிட்டும், மானமும் மதிப்பும் பகுத்தறிவு விளக்கமும் இல்லாப் பிறவியராகவே தமிழ் மக்கள் என்றும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டும் வடமொழி வழியே சடங்குகள் செய்து வருகின்றனர். அப்படிச் செய்யாவிட்டால் மழை பொழி யாது; நாடு விளையாது; நோய் நொடி பரவும்; கரு வாய்க்காது; மங்கல வாழ்வு நீடிக்காது என்று அச்சுறுத்தி அச்சத்தாலேயே தமிழ்ப் பிறவியர் அடங்கிப் போகவும், விடாப்பிடியாக வடமொழிச் சடங்கு வழியைப் பற்றிக் கொண்டிருக்கவும் செய்கின்றனர்.

இவ் வடமொழிச் சடங்கு நடத்தி வாழ்வு கொண்டவர் கைம்மையர் ஆகவில்லையா?, நோய் நொடி கொள்ள வில்லையா?, ஒருவரை ஒருவர் பிரிந்து போகவில்லையா?, இச் சடங்கு செய்வார் குடும்பத்திலும் இச்சடங்கு நடத்தத் தூண்டுவார் குடும்பத்திலும் இவை ஏற்படவில்லையா? இவ்வகைச் சடங்கு நடத்தப்பட்டவர்க்கு மட்டும் கொட்டோ கொட்டென மழை பொழிந்து விளைவு பெருகி வாணிக வளம் சிறந்து நோய் நொடியே இல்லாமல் வாழ்கின்றனரா?

சடங்கிலேயா வாழ்வு இருக்கிறது.

வாழ்வு அவரவர் கையிலே அல்லவா இருக்கிறது!

கை என்பது செயலும் ஒழுக்கமும். செய்யப்படும் சடங்கு புரியும் மொழியில் புரியும் வகையில் பொருந்தும் முறையில் செய்யப்படவேண்டும் என்பதே அடிப்படை.

வடமொழி ஓதாமல் கரணம் செய்யப்பட்டவர்களுக்குக் கரு உண்டாகவில்லையா? வாழ்வு சிறக்கவில்லையா? அவர்கள் ஊரில் மழை பெய்யவில்லையா?

மந்திரம் ஓதியமையாலா கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தன?

மந்திரம் ஓதியமையாலா ஆடும் மாடும் கருக் கொண்டு குட்டியும் கன்றும் போட்டன. எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவா?

சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஊடகமாகவும் உணர் வாகவும் இருப்பது எது? அது மொழி!

அவ்வூடகம் சொல்பவனுக்கு முழுமையில்லாமல் கேட்ப வனுக்கோ அறவே இல்லாமல் இருக்குமானால் என்ன பயன் செய்யும்?

ஊடகமா அது, அல்லது கேடகமா?

இசை பாடுவதே மொழி வேறுபாட்டால் பொருளறிய வராமல் போகின்றது. அதனினும் மொழி இல்லாக் கருவியிசை இன்பம் தருகிறது.

காதல் மனைவிக்கும் காதல் தலைவனுக்கும் மொழி வேறு வேறு இருக்க, அவர்கள் கொஞ்சுவதனை மொழி பெயர்த்துச் சொல்ல மொழி பெயர்ப்பாளி வைத்தால் எப்படி இருக்கும்? அப்படித்தானே அயல் மொழியில் செய்யும் கரணம் இருக்கும் இசை உவமை கூறியவர் அறிஞர் தாகூர். வழிபாட்டுக்கும் சடங்குக்கும் பொருந்து வது தானே இவ் வுவமை.

பொருந்துதல் என்ற ஒன்று எதற்கும் வேண்டும் அல்லவா.

துறவிகளின் மையத்தில் காதலின்பம் பற்றிப் பேசுதல் பொருந்துமா? மணப்பெண்ணும் மணமகனும் மணங்கொள்ளும் போதில் ‘காசியாத்திரை’ என்னும், சடங்கு வைத்தல் கேலிக்கூத்துத் தானே, “மணமேடைக்கு ஏனடா வந்தாய்” என்று மண மகனைக் கேட்கத் தோன்றுமா தோன்றாதா? அவன் காலிலே விழுந்து அழைத்து வரப் பெண்ணைப் பெற்றவன் மானமிழந்து அப்போதே போக வேண்டும் என்பது மணச் சடங்கையே இழிமைப்படுத்துவது இல்லையா?

அங்கே மிதிக்கும் அம்மிக்கல் எதற்கு? “கற்புக்கெட்ட அகலிகை கல்லானாள். நீயும் கற்புக் கெட்டால் அப்படியாவாய்” என்று இதனை நினைவூட்டும் வேளையா அது?

கற்புடையவளாம் அருந்ததி அவளை வணங்க வேண்டு மாம். அதன் அடையாளம் வானம் பார்த்தலாம்.

மண்டபத்துக்குள் இருந்து வானம் பார்க்க முடியுமோ? முகடு என்ன ஓட்டை பட்டதா? பகலிலே விண்மீன், காண்பான் காட்டுவான் ஆகிய இருவருக்கும் பட்டொளியாகத் தோன்றுமா?

சொல்பவன் சொன்னாலும் கேட்பவனுக்கு அறிவு வேண் டாவா "கேழ்வரகிலே நெய் ஒழுகுகிறது என்றால் கேட்பவனுக்கு அறிவு எங்கே" என்பது பழமொழி அல்லவா.

கரணமாகிய சடங்கு, அறிவொடு கூடியதாக வாழ்வொடு அமைந்ததாக இருக்க வேண்டும் புகைபோட்டுக் கண்ணைக் கசக்கிக் கொண்டு இருக்கச் செய்யும் இச் சடங்கு முறையைக் கல்வி அறிவியல் ஆகிய துறைகளில் யாங்களே முன்னோடி என்னும் கூட்டம் செய்தால், தொடர்ந்து மூடராகவே தமிழர் இருக்க வேண்டும் என்னும் ஒரே ஒரு நோக்கன்றி வேறு நோக்கு இருக்க முடியாதே.

வடமொழியாளர் சடங்கு வடமொழியாக இருக்கட்டும். தெலுங்குத் தியாகராசர் அவர் தாய் மொழியில் பாடியது சரியே. அதனை அம் மொழியறியார் தலையில் வரிந்து வரிந்து கட்டினால், கட்டுபவர் தந்நல வெறியர். கட்டப் பெறுபவரும், கட்ட வேண்டும் என்பவரும் மூடரும், மூடராக இருப்பதே மேல் என்று உறுதி செய்து கொண்ட மூடருமே ஆவர். நாட்டு மாந்த ரெலாம் ஆட்டு மந்தையா மென எண்ணிவிட்டார் என்றும், தோல் காதுள்ள நாட்டுக்கு ஏற்காது என்றும் பாரதியார் சொன்னதையே நாம் அவர்க்கு படைய லாக்கலாம்.

இதனை எழுதுகின்ற என் திருமணம் 1946இல் நிகழ்ந்தது. தாய்மார்கள் முன்னின்று நடத்தினார்கள். திருமணம் நிகழ்ந்தது இரவுப் பொழுது.

கைந்நூல் மாலை ஒவ்வொன்றே எங்கள் மணமாலை. ஓரைந்து உருபாவுக்குள் எனக்கும் என் உயிர்த் துணைக்கும் உடை. கைந்நூலாடை கெட்டிமேளம் என்ன தெரியுமா?

மகளிர் ஒலித்த குரவை ஒலி. இன்றும் யான் சங்கரன் கோயில் பகுதியில் நிகழ்த்தும் திருமணங்களில் அக்குரவை ஒலியை எழுப்பச் சொல்லி இனிக்க இனிக்கக் கேட்கிறேன்.

வேள்வி இல்லை; அம்மி இல்லை. காசி யாத்திரை இல்லை; மந்திரம் இல்லை. அகநானூறு '86, 136' கூறும் தமிழ் மணமாகவே எங்கள் மணம் நிகழ்ந்தது.

எனக்குத்தான் இம்முறையில் மணமா? இல்லை எங்கள் குடிமையே இவ்வழியையே கொண்டது. ஊரே இவ்வழி ஒன்றையே கொண்டது.

ஊர்க்குப் பெயர் வாழவந்தாள் புரம்.
குலதெய்வப் பெயர் வாழவந்தம்மை.
என்னைத் தாங்கியிருந்த தெய்வப் பெயரும் வாழவந்தாள்.
ஊர் வாழவந்ததா? வாழ்ந்ததா?

நூற்றுப்பத்து வீடுகளே இருந்த அந்த ஊரில் 35 பேர் அரசு வருவாய் பெற்றவர். எப்பொழுது? விடுதலை பெற்ற 1947-க்கு முன்னரே! கள்ளுக் கடை - கட்சிக் கொடி - கால் வைக்காத ஊர் எங்கள் ஊர், அம்மட்டோ, கூரை வீடு என ஒன்றுதானும் அன்றே இல்லாத ஊர்.

எவரொருவரும் எரிவளர்த்து, மந்திரம் ஓதி, அம்மிமிதித்து அருந்ததி பார்த்து, காசி யாத்திரை சென்று திருமணம் செய்தவர் இல்லை. ஆயினும் மற்றை ஊர்களைப் போல் மழை பெய்தது; விளைவும் விளைந்தது. மக்களும் பெருகினர். 1950 வரை என் வாழ் நிலமாக இருந்தது அவ்வூர். 'வாடா, வாடி' 'லே, ஏலே, டே' இப்படிச் சொல் தானும் சொல்லாத மண்வள மாண்பு கொண்டது எங்கள் ஊர் என்பதை இன்று நினைத்தாலும் நெஞ்சம் நிமிர் கிறது. மகிழ்வுக் கண்ணீரும் சுரக்கிறது.

ஒரே ஒருவர் வெளியூர்க்குப்போய்க் குடித்து விட்டு ஊருக்குள் வந்தார்.

நடுத்தெருவில்! நாயை மிதிப்பது போல் அவரை ஊரவர் மிதித்தனர். மிதிபட்டவர் ஊரை விட்டே ஓடி விட்டார்.

ஆறுதிங்கள் கழித்து ஊர்க்கூட்டம் கூட்டி, 'இனி அதனைத் தொடேன்' என்று உறுதி கூறி ஊரை வணங்கிய பின் ஊரில் சேர்க்கப் பட்டார். அந்நிலை, வீடு தோறும் குப்பையை வாரிக் கொட்டும் தொலைக்காட்சி வருகையாலும், வேற்றூரார், படைத் துறையார்

ஆயோராலும் கட்டுக் குலைந்து போகுமோ என்னும் நாணுதலும் இது கால் எழவே செய்கின்றது. இடைவெளி ஐம்பது ஆண்டுகள் அல்லவா! அழிவு வளர்ச்சி ஆயிரமாயிற்றே! அறிவு வளர்ச்சி யோடே அழிவு வளர்ச்சி தானே முந்தி நிற்கிறது.

1951 முதலே திருமணம் முதலிய சடங்குகளைத் தமிழ் நெறிப்படியே செய்ய வேண்டும் என உறுதி பூண்டேன். 1958 முதல் 1988 வரை மதுரைத் திருநகர் வாழ்வு எனக்குக் கிட்டியது. திருநகர்க் கும் திருப்பரங் குன்றத்திற்கும் இடையே அமைந்த தொழிலாளர் நகர் 'ஆர்வி'பட்டி அதில் 604 வீடுகள். அவற்றில் நானூறு வீடுகளி லாவது யான் திருமணம் நிகழ்த்தி வைத்திருப்பேன்; வாழ்த்தி யிருப்பேன்.

எப்படி நிகழும்? வீட்டு முற்றத்தே அருமையாய் இயற்கைப் பந்தரும் செயற்கைப் பந்தரும் ஒருங்கு திகழ நிகழும்!

என் உளங்கொண்ட உயரிய இலக்கிய மேடைகள் ஆர்விப் பட்டியில் நிகழ்த்தப்பட்ட திருமண மேடைகள். இடையே சிறிய ஒலி வருமா? ஒலிவர விடுவரா? குறுக்கே எவரும் நடமாட விடுவரா? முதிய தாய்மார்கள் மட்டுமா, இளங்காளைகளாம் மாணவர்கள், தொழில் தோன்றல்கள், பெரியவர்கள் நிகழ்வைக் கண்ணிமையாகக் காப்பார்கள்.

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாக முழுத்த நாள் எல்லாம் எனக்கு அழுத்தமான பணிநாளாக ஆகிவிட்டமையால் 3000-க்கு மேல் திருமணங்கள் நிகழ்த்தும் பேறு வாய்த்தது. ஈரோட்டில் தோன்றிய குறளாயம் 1984 முதல் பெருந்துணை யாகியது. திருக்குறள் வாழ்வியல் நூல் என்பதை நிலை நாட்டவே தொடங்கிய குறளியமும், குறளாயமும் குறளாயத் திருமண முறைத் திட்டத்தை வகுத்துப் பரப்பின. நிறுவனர் வேலா அரச மாணிக்கனார், சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தனார், பெரும்புலவர் மீ. தங்கவேலனார், பாவலர் ஈவப்பனார் நகைச்சுவையரசு ஆறுமுகனார், யான் ஆயோர் குறளாயத் திருமண முறையைக் கூடியும் தனித்தும் செய்தோம். பின்னே ஈரோட்டில் யான் பதின்மர்க்குப் பயிற்சியும் குறளாயச் சார்பில் வழங்கினேன். அப்பயிற்சியை மேம்படச் செய்து வருபவர் கோயில்பட்டி புலவர், பெருநாவலர் புகழ் பரப்பப் பிறந்த தோன்றல்

மு. படிக்கராமு அவர்கள். மற்றொருவர் திருக்குறள் முற்றோது தோன்றல், வழக்கறிஞர் தென்னிலை இராம. கோவிந்தனார்.

தமிழ்வழித் திருமணம் குறளயத் திருமணம் எனப் பெயரால் இரண்டானாலும் நெறி ஒன்றேயாம். தமிழ்நெறிக் கரணம் என்பதும் அதுவேயாம். தமிழ்நெறியாவது குறள் நெறியே.

1984 முதல் 1994 வரையில் திருக்குறள் ஓதித் திருமணம் நிகழ்த்திய ஊர்களில் இருந்து எடுத்து வந்த கற்கள் 1330 கொண்டே திருவள்ளுவர் தவச்சாலையில் அறம் பொருள் இன்பம் என்னும் முச்சிறு மலைகளும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திருமணம் ஒன்றுதான் குடும்பச் சடங்கா? திருமண உறுதி, பிறப்பு விழா, பெயர் சூட்டு விழா, பூப்பு விழா, காதணி விழா, மணி விழா, புதுமனை புகுவிழா என விழாக்கள் உண்டே. இவற்றையும் முழுமையான தமிழ் நடைப் படுத்துதல் கட்டாயம் என்பதால் ஒவ் வொன்றாகப் பெருக்கி இங்குச் சுட்டப்படும் நெறிகள் அனைத்தும் என்னால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வந்திருக்கின்றன.

ஒவ்வொரு விழாவும் தமிழ்நெறிப் பட்டவை என்பதை இச் சுவடி உணரவைக்கும்.

கத்தரித்தல் இல்லாத புதுமனை புகுவிழா!

இனிப்பு வெட்டாத பிறந்த நாள் விழா!

விழாவில் கத்தரித்தலும் வெட்டலும் விளக்கை - மெழுகு திரியை - ஊதியணைத்தலும் வேண்டுமா?

எங்கிருந்தோ மலரையும் மங்கல அரிசியையும் எறிந்து முன்னிருப்பார் தலைகளைத் தடவவைக்க வேண்டுமா?

மங்கல விழா, மங்கலவிழாவாகத் திகழ வேண்டும்.
வாழ்த்துதல் என்பது வாழ்த்தாகவே இருக்க வேண்டும்.
பெண்மையை மதிக்கும் வகையில்
பெரியவரைப் போற்றும் வகையில்
முந்தையரை நினைக்கும் வகையில்

ஆன்மநேயம் மாந்தநேயம் பாராட்டும் வகையில் விழாக்கள் திகழ வேண்டும்.

அதே பொழுதில், தாம் பிறந்த மண்ணையும் மண்ணின் மொழியையும் மண்ணின் மைந்தரையும் மீட்டெடுப்புச் செய்து மேன்மைப்படுத்துவதாகவும் விழாக்கள் சடங்குகள், ஆகியவை அமையவும் வேண்டும். இவற்றையெல்லாம் உள்நோக்கி உள் நோக்கி உட்கொண்ட உணர்வின் உந்துதலே **தமிழ்நெறிக் கரணம்** என்னும் இச் சிறு சுவடியாம்.

மலையக அன்பர்கள் ஆ. மாரியப்பனார், அருள்முனைவர் முதலியோர் திருமணம், புதுமனை புகுவிழா, பெயர் சூட்டுவிழா முதலியவற்றை நிகழ்த்தும் கரணங்களைப் பல்கால் தொலைப் பேசி வழியே கேட்கின்றனர். தமிழகத்தில் உள்ளவர்களும் விளக்கமும் விளக்கச் சுவடியும் வேண்டுகின்றனர். உலகத் தமிழர் பேரமைப்பு. இந்நெறிகளை அவாவி நிற்கின்றது.

குறளாயத் திருமணக் கரணம் முன்னரே நூலாக வெளி வந்திருப்பினும் மற்றைக் கரணங்களும் இணைந்த சுவடி இஃதாகும்.

திருமண வீட்டில் தேங்காய் பழம் தருதற்குப் பகரமாகத் ‘திருமணப் பரிசு’ என்னும் நூலும், ‘மங்கல மனையறம்’ என்னும் நூலும் ‘நினைக்கும் நெஞ்சம்’ என்னும் நூலும் வழங்குதலை அறிமுகப்படுத்தினோம். அச்சுவடிகள் பத்துப் பதிப்புகளுக்கு மேல் வெளிப்பட்டுள.

வாழ்வியல் குறுந்திரட்டாக வெளிப்பட்டவை அவை.

வாழ்த்துவார்க்கும் வாழ்வுக்கும் வேண்டும் குறிப்புகள் பலவற்றைக் கொண்டவை அவை.

இவற்றைக் கற்பார் கற்க!

பரப்புவார் பரப்புக!

செயற்படுத்துவார் முன்னெழுக!

ஒட்டுமொத்த உலகத் தமிழர் அனைவர்க்கும் உழுவல் அன்பொடும் வழங்கும் உரிமைப்படையல் இஃதாகும்.

இன்பமே சூழ்க

11.05.2003 **இரா. இளங்குமரன்**

உள்ளுறை

உரிமைப்படையல் 3

1. தமிழ்நெறித் திருமணம் 15
2. தமிழ்நெறித் திருமண உறுதி 27
3. தமிழ்நெறிப் பிறந்தநாள் வாழ்த்து 31
4. தமிழ்நெறிப் பெயர்சூட்டு விழா 37
5. தமிழ்நெறிக் காதணி விழா 42
6. தமிழ்நெறிப் பூப்புநீராட்டு விழா 45
7. தமிழ்நெறி வளைக்காப்பு விழா 47
8. தமிழ்நெறிப் புதுமனை புகுவிழா 50
9. தமிழ்நெறியில் மணிவிழா முதலியன 55
10. தமிழ்நெறியில் நினைவுக் கரணம் (அ) படத்திறப்பு 59
11. திருக்குறள் போற்றி 64
12. நல்வாழ்வுக் குறிப்புகள் 70
13. நலவாழ்வுக் குறிப்புகள் 73

1. தமிழ்நெறித் திருமணம்

(பொதுக்குறிப்புகள்)

❖ நம் பழைய மரபு - நம் பண்பாடு - பகுத்தறிவு - இன நலம் என்பவற்றைப் பாதுகாத்துப் போற்றும் வகையில் அமைக்கப்படுவது, இத்தமிழ் நெறித் திருமணம். (மற்றை விழாக்களும் இத்தகையவே)

❖ எளிமை இனிமை நிறைவு என்பவை சார்ந்தவை இத்திருமண முறையும், பிற சடங்குகளும்.

❖ முற்றிலும் தமிழையும் தமிழ் நெறியாம் திருக்குறளை யும் கொண்டு நிகழ்த்தப் பெறுவன.

❖ இவை பாராட்டுதல் வாழ்த்துதல் என்பனவே உடை யவை; நல்லவை அன்றி அல்லவை இடம் பெறாதவை.

❖ மகளிர், பெற்றோர், சான்றோர் ஆயோரை முதன்மைப் படுத்தி நிகழ்த்தப் பெறுவன.

திருமணம் நிகழ்முறை

❖ மணமக்கள் இருவரையும் மணவுடை, மணமாலை ஆயவற்றுடன் ஒரே நேரத்தில் அழைத்து, மண இருக்கையில் மணமகனுக்கு வலப்பக்கம் மணமகளும், மணமகளுக்கு இடப்பக்கம் மணமகனும் அமரச் செய்தல்.

❖ மங்கல விழாத் தலைவர், முன்னிலையர், மங்கலவிழா நிகழ்த்துநர் ஆயோரை முன்மொழிந்து அமரச் செய்தலும், வழிமொழிதலும்.

- ❖ தலைவர் விழாத் தலைமை ஏற்று மணமக்கள் வீட்டார் சார்பாக வரவேற்கக் கூறலும் அறிமுக உரையும் சிறப்புச் செய்தலும்.
- ❖ மணவிழாவை இவர் நிகழ்த்துவார் எனத் தலைவர் கூறுதல்.

மணவிழா நிகழ்த்துதல்
நிகழ்த்துநர் செயன்முறை: 1-12

1. மணமக்கள் இருவரும் எழுந்து அவையை வணங்குமாறு செய்து மீண்டும் இருக்கையில் அமரச் செய்தல்
2. இயற்கை இறைவழிபாடு(அ) மொழி வாழ்த்து (அ) திருக்குறள் போற்றி என்பவற்றுள் ஒன்றையோ இரண்டையோ மூன்றையுமோ சூழ்நிலை காலம் ஆயவற்றைக் கருத்தில் கொண்டு கூறுதல்.

இயற்கை இறைவழிபாடு:

செங்கட் கரும்பாய் இனிப்பானைச்
செழுந்தேன் மலராய் மணப்பானைத்

திங்கட் பிறையாய்த் திகழ்வானைத்
தெளிந்த இசையாய் அமைவானை

அங்கட் புவனம் அளிப்பானை
அறமோ டின்பம் அருள்வானை

நங்கட் புலத்துள் நிறைவானை
நறவார் மலர்தூய்ப் பணிவாமே.

மொழி வாழ்த்து:

நீல வானின் உயரத்தை
நெஞ்சம் கவரும் நிலப்பரப்பைக்

கோலக் கடலின் ஆழத்தைக்
குன்றத் தமைந்த பேருரத்தைச்

சாலத் துளிக்கும் பனிநீரைச்
சாந்தில் தொடுத்த தீந்தேனை

மூலச் சொல்லாய் முகிழ்த்தோங்கும்
முன்னைத் தமிழே வாழியவே.

திருக்குறள் போற்றி: மந்திர மொழிகள்:

அகரமுதலாம் ஆதியே போற்றி!
மலர்மிசை ஏகும் மாணடி போற்றி!
தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி!
எண்குணத் திலங்கும் இறையே போற்றி!
அமிழ்த மழையாம் அருளே போற்றி!
ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி!
நிறைமொழி அருளும் நிறைவே போற்றி!
குணமெனும் குன்றே குறியே போற்றி!
மனத்தில் மாசிலா மணியே போற்றி!
வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி!
மங்கல மனையற மாட்சியே போற்றி!
அறிவறி பண்புப் பேறே போற்றி!
அன்போ டியைந்த வழக்கே போற்றி!
– அகர முதலாம் ஆதியே போற்றி! போற்றி!

3. மணவிழாத் தொடக்கவுரை:

திருமணக் கரணத்திற்கு வந்துள்ள பெருமக்கள், பெற்றோர், உற்றார் உறவு அன்பு நண்பு ஆகிய அனைவரையும் வணங்கி அவர்கள் இனிய இசைவுடன் மங்கல விழா நிகழ்த்துவதாகக் கூறுதல்.

4. தாய் மண் வழிபாடு (அ) உலக நலவழிபாடு:

“ஒவ்வொருவர் நலமும் உலக நலத்தில் உள்ளது; உலக நலம் ஒவ்வொருவர் நலத்திலும் உள்ளது. நாம் உடுத்தும் உடை, உண்ணும் உணவு, உறையும் வீடு, உளதாகிய வாழ்வு ஆகிய எல்லாவற்றிலும் உலகவர் பங்களிப்பு இல்லாமல் இல்லை.

மணமக்கள் அணிந்துள்ள மாலைக்குள் எத்தனை பேர் உழைப்பு உள்ளது? பூ, பதியன் போட்டவர், நட்டவர், நீர் விட்டவர், களை எடுத்தவர், காத்தவர், பூப்பறித்தவர், மாலை கட்டியவர், வாங்கி வந்தவர் என எத்தனையோ பேர்களின் உள்ளார்ந்த உணர்வின் உழைப்புத்தானே மணமங்கல மாலையாகித் திகழ்கின்றது. இதனால் உலகம் நமக்குள்ளும், உலகுக்குள் நாமும் இருத்தல் புலப்படும். ஆதலால், உலகம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தாய்நாட்டு மண் வழிபாட்டை மணமக்கள் செய்கிறார்கள்." என்று கூறித் தட்டத்தில் வைக்கப்பட்டுள்ள மண்ணின் மேல் உதிரிப்பூக்களை மும்முறை தூவச் செய்தல்.

"உலகம் வாழ்க! உயர்வெலாம் வாழ்க!"

என மும்முறை மணமக்களைச் சொல்ல வைத்தல்.

5. வாழ்வியல் வழிகாட்டி (அ) திருவள்ளுவர் வழிபாடு:

"மக்கள் அனைவரும், உலகில் தக்க வகையில் எவ்வாறு வாழவேண்டும் என்று வழிகாட்டியவர் திருவள்ளுவர்.

அறத்தால் பொருள் தேடி, அப்பொருளால் இன்புற வேண்டும் என்பதற்காக முப்பால் அருளியவர் அப்பெருமகனார்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றும்

"அறத்தான் வருவதே இன்பம்" என்றும், தெளிவு படுத்தியவர் அவர்.

இருசிறகு வீசிப் பறக்கும் ஒரு பறவை போல், மணமக்கள் இருவரும் ஒருமைத் தன்மையராய் இல்வாழ்க்கை நடத்தினால் அவர்கள் வாழ்வே வீடுபேற்று இன்பவாழ்வு என்றும் அமிழ்தம் அருந்தும் அமர வாழ்வு என்றும் கூறியவர் அவர்.

கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் துணையாக அமைந்து குடும்பக் கடமையை இருவரும் ஒப்பாகத் தாங்கி, வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்தால் அவர்கள்

வாழ்வு தெய்வ வாழ்வு என்று உறுதி மொழிந்தவர் அவர். ஆதலால், நலவாழ்வும் நல்வாழ்வும் வேண்டி, அவரைப் போற்றுவோம்'' எனக் கூறி, வள்ளுவர் சிலைக்கோ, படத்திற்கோ, திருக்குறள் நூலுக்கோ மலர் தூவி மணமக்கள் வழிபடச் செய்தல்.

"வள்ளுவம் வாழ்க; வாழ்வியல் வாழ்க"

என மும்முறை அவர்கள் கூறச் செய்தல்.

6. சான்றோர் வழிபாடு

மணவிழாவுக்கு வந்துள்ள பெருமக்கள், தாய்மார்கள், செல்வங்கள் அனைவரையும் போற்றும் வகையால், மணமக்கள் எழுந்து நின்று அவையோரை வணங்குமாறு செய்தல். "சான்றாக அமைந்த பெருமக்களே, நீங்கள் மனச்சான்றுடன் பேசி, அதன்படி செயலாற்றும் பெருமக்கள். நீங்கள் திருமணத் திற்கும் சான்றாளராக விளங்குகிறீர்கள். இம் மணமக்கள் இந்த நல்ல பொழுதில், அவையோராகிய உங்கள் அனைவர் வாழ்த்தையும் வேண்டி, வணங்குகிறார்கள். தனித்தனியே வந்து வணங்குதல் போலாக நேரங்கருதி உங்கள் அனைவர் முன்னும் நின்று வணங்குகிறார்கள். 'நாங்கள் அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ ஏதாவது சொல்லியிருந்தாலும், செய்திருந்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு எங்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம். ஆயிரம் வாழ்த்துதல் ஒரு பூனையையும் யானையாக்கும். உங்கள் வாழ்த்துதல் எங்களை என்றென்றும் ஓங்கி உயர்ந்து வாழச் செய்யும்' என உங்களை வேண்டுகிறார்கள். " எனக் கூறி அவையை வணங்கச் செய்தல்.

" சான்றோர் வாழ்க! சால்புகள் வாழ்க"

என மணமக்களை மும்முறை கூறச்செய்தல்.

சான்றோர்கள் அனைவரையும்,

" மணமக்கள் வாழ்க! வாழ்க!

என மும்முறை வாழ்த்தச் செய்வித்தல்.

7. பெற்றோர் வழிபாடு

மணமக்களைப் பெற்ற பெருமைக்கு உரியவர்களை மணமேடைக்கு அழைத்து, மணமக்களை அவர்கள் பெற்றோர் களுக்கு மாலை அணிவிக்கச் செய்தல்.

மகவைத் தந்தவர் தந்தை; ஆகி (உண்டாகி) இருந்தவர் ஆய் ஆகிய தாய். அவர்கள் இருவரும் எத்தனை எத்தனை பேறுகளைப் பெற்றிருந்தாலும் பெற்றோர் ஆவது இல்லை. மக்களைப் பெற்றதாலேயே பெற்றோர் எனப்பட்டனர். "பெறு மவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற" என்ற திருவள்ளுவர், "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்றார். பெற்றோர்கள் கொடையே உயிர்க்கொடை; உடற்கொடை; உணர்வுக் கொடை; உயர்வுக்கொடை எல்லாமும். ஆதலால், கண் கண்ட தெய்வமாகிய பெற்றோர்களை மணமக்கள், வணங்குகிறார்கள் எனக் கூறி மணமக்களை

"பெற்றவர் வாழ்க! பெருந்தகை வாழ்க!

என மும்முறை வாழ்த்தச் செய்து வணங்க வைத்தல். பெற்றோர், தம் மக்களுக்கு மலர் தூவி,

"உயிரே வாழ்க! உயர்வே வாழ்க!

என மும்முறை வாழ்த்தச் செய்தல்.

குறிப்பு: பெற்றோர்களுள் நேரில் வாழ்பவர்களும் நெஞ்சில் வாழ்பவர்களும் வாழ்பவர்களே. பெற்றோர்கள் இனி இருவீட்டார் அல்லர்; மணமக்கள் போலவே ஒரு வீட்டார். ஈராறு கள் கூடும் கூடுதுறை போன்ற இணைவு இது. பெற்றோர்க்குப் பெற்றோர் இருப்பின், அவர்களையும் மணமக்கள் வழிபட்டு

வாழ்த்துப் பெறச் செய்யலாம். மணமக்கள் உறுதிமொழி படித்தல் (அ) கூறுதல் வேண்டுமெனின் ஏற்கலாம்.

8. திருமண மங்கலநாண் (அ) விரலாழி பூட்டல்:

“பழைய நாளில் நம்முன்னோர் முழுமதி பார்த்து இரவுப் பொழுதில் மங்கல விழா நிகழ்த்தினர். முழுமதிப் பொழுதே ‘**முழுத்தம்**’எனப்பட்டது. முழுத்தம் பார்த்தல்; முழுத்தப் புடவை; முழுத்தக்கால் நடல் என்பவை பழைய வழக்கம். முழுத்தம் ‘முகூர்த்தம்’ என ஆக்கப்பட்டதுடன், பகல் மணமாகவும் மாறியது. ஆயினும், வளர்பிறையில் திருமணம் செய்தல் அதன் அடையாளமாம். முன்னாளில் மங்கல விழாவைத் தாய்மார்களே முன்னின்று நடத்தினர். பொது விழாக்களும் சடங்குகளும் நடத்துவதில் தேர்ச்சியும் செய்நேர்த்தியும் உடைய ‘**முதுசெம் பெண்டிர்**’ நால்வர் கூடி நடத்தியதையும். கற்பினில் வழுவாமல், நல்ல பல உதவிகளும் புரிந்து, கணவன் பாராட்டும் வகையில் வாழ்க என அவர்கள் வாழ்த்தியதையும் அகநானூறு (86, 136) கூறுகின்றது.

அந்நிலை, குலப்பெரியவர், ஊராளியர் தலைவர், நாட்டாண்மை, மூப்பர் என்பவர் முன்னிலையில் குடிமை மணங்களாக நிகழ்ந்தன. பின்னே சடங்குகளும் மாறி, மொழியும் மாறி ஆடவர் நடத்துவதாகவும் அமைந்துவிட்டது. பகுத்தறிவு, சீர்திருத்தம் எனப்படும் மணங்களும் ஆடவர் நடத்துவன வாகவே ஆகிவிட்டன. மணம் முதலிய சடங்குகளை மகளிர் நடத்துகின்ற மரபை மீட்டெடுப்பின் நன்மையாம்” எனக்கூறி, முதிய தாய்மார் நால்வரையோ பலரையோ மணமங்கல நாணை வழிபட்டு எடுத்து மணமகன் கையில் வழங்கித் திருப்பூட்டு நடத்து மாறு செய்தல்; கெட்டிமேளம் முழங்கச் செய்தல், தாய்மார் களைக் குரவை (குலவை) இடச்செய்தல் பெருநலமாம்.

திருப்பூட்டு நிகழ்ந்த பின்னர்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என மும்முறை கூறி, மேடையில் இருப்பவர்களையும் அவை யோரையும் கூறச் செய்தல். மேடையில் இருப்போர் மலரும் மங்கல அரிசியும் தூவுதல்.

9. மாலை மாற்றல்

துணை மாலைகள் இரண்டையும் எடுத்து, மணமக்கள் கையில் ஒவ்வொன்று வழங்கி, ஒருவர்க்கு ஒருவர் மும்முறை மாலை சூட்டி அமர்தல் மாலை மாற்றாகும். 'மாலை மாற்று மாலை' என்பது தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்று.

மாலை என்பது தொடர்ச்சி என்னும் பொருளது. மணமகன் நெஞ்சம் மணமகள் நெஞ்சமாகவும், மணமகள் நெஞ்சம் மணமகன் நெஞ்சமாகவும், 'மாறிப்புகுதல்' அல்லது 'கூடுவிட்டுக் கூடு பாய்தல்' சான்று இது. இருவரும் ஒருவராதல் விளக்கம் இது. இரண்டு கண்கள் ஒன்றைப் பார்ப்பது போலவும், இரண்டு காதுகள் ஒன்றைக் கேட்பது போலவும் உடலுறுப்புகள் இணை இணையாய் அமைந்து ஒன்றாகச் செயல்படுதல் போலவும், இருவரும் ஒருவராய்-ஒப்பற்றவராய்-த் திகழக் கற்பித்தல் இது வாகும். 'நான்' என்பாரை 'நாம்' என இணைக்கும் இணைப்பும் ஈதாம்.

10. இடம் மாற்றி அமர்த்தல்

மணமகளை வலப்பக்கமாகக் கொண்டிருந்த மணமகன். மணமகளை இடப்பக்கமாகக் கொண்டு 'என் வீடு உன் வீடு; உன் வீடு என் வீடு' என உறவுரிமை காட்டி உறவாதல் பொருளாக மாறி அமரச் செய்தல். மணமகனின் உடன் பிறந்தாள் திருப்பூட்டு நிகழ்வு முதல் குடும்பவிளக்கு ஏற்றுதல் என்னும் நிறைவுச் சடங்கு வரை உடனிருப்பாள். அவள் மணமகளுக்கு நாத்துணை யாள் (பேச்சுத்துணையாள்) 'நாத்தினாள்' என மக்கள் வழங்கு கின்றனர். 'நாத்தூண் நங்கை' என்றார் இளங்கோவடிகள்.

நாற்றங்காலில் வளர்ந்த பயிர். நடவு நிலத்தில் ஊன்றப் படும். அது, நீர் பிடிக்கவும் நிமிரவும் உரம் கொள்ளவும் சிலநாள் செல்லும். அதற்கு எடுப்புத் தண்ணீர் விடுவது உழவர் வழக்கம். அதுபோல் மணமகள், மணமகன் வீட்டுப் பழக்கவழக்கங்கள், உறவுமுறையார் இன்னவற்றை அறிந்துகொண்டு செயல்படும் வகையில் நல்ல துணையாக இருப்பவள் நாத்துணையாள். இடம் மாறி அமர்தல் நோக்கு. "அன்போடு இயைந்த வழக்கு," "அன்புற்று அமர்ந்த வழக்கு" என்று போற்றக் கூடியதாம்.

11. குடும்ப விளக்கு ஏற்றுதல்

கணவன் மனைவி ஆகிய இருவரும் இணைந்து விளக்கேற்றுதல் இஃதாகும்.

"மனைவிளக்கு" என்பது பழந்தொடர்; சங்க இலக்கியம் கண்டது. பாவேந்தர் கண்டது 'குடும்ப விளக்கு'. குடும்ப விளக்கு திருக்குறள் விளக்கம் என்பார் பாவேந்தர். குடும்ப விளக்கு ஏற்றுதல் இல்லுறை தெய்வ வழிபாடாகிக், குடும்பம் வாழையடி வாழையாய்த் தழைத்தோங்க வேண்டி ஏற்றப்படுவதாம். ஒற்றைத் திரி விளக்கு, ஓராயிரம் விளக்கு பற்றி ஒளி செய்யச் செய்வது போல், எங்கள் குடும்பம் பல குடும்பங்களுக்கும் ஒளி தருவதாக என்னும் பொருளில் மலர்தூவி வழிபட்டு மணமக்கள் அவ் விளக்கை மும்முறை வலம் வருதல் இச்சடங்காகும்.

12. வாழ்த்து

குடும்ப விளக்கு இயற்றிய பாவேந்தர், மணமக்களைப் பிரியா வாழ்வினராகத் திகழவேண்டும் என வாழ்த்தினார். பிரியாவாழ்வு நெஞ்சில் பிரியாவாழ்வாம். இதற்கு, அவர் காட்டிய உவமை தனிப்பெரும் சிறப்பினது.

கடகட, மடமட, சலசல, பலபல, என்பவை இரட்டைச் சொற்கள். இவற்றைப் பிரித்தல் ஆகாது. பிரித்தால் பொருள் தாராது. ஆதலால், இவ்விரட்டைச் சொற்களைப் போல் பிரிவிலா வாழ்வினராக மணமக்கள் வாழ வேண்டும் என்றார்.

"இரட்டைக்கிளவி போல் பிரியா வாழ்வினர்

என்பது அது. கிளவி என்பது சொல்.

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், 'கணவன் மனைவியர் பெயரைப் பிரித்தும் எழுதுதல் ஆகாது' என்று கடைப்பிடியாகக் கொண்டார்.

பாவேந்தர், 'குடும்ப வாழ்வில் கணவன் மனைவியர் ஒரு பழமரம் போல் இருக்க வேண்டும்' என்பதைச் சுட்டினார். மரத்தின் அடி, கிளை, கவடு, வளார், இலை, பூ, காய், கனி ஆகியவை வெளிப்படத் தெரியும். ஆனால், ஆணிவேர், பக்கவேர், சல்லி வேர், சிம்பு வேர் முதலியவை வெளியில் தெரியா. மரத்தின் தோற்றமும், வாழ்வும் பயனும் வேரைக் கொண்டே உள்ளது. அதுபோல் குடும்பவாழ்வின் பெருமை, வளம், பயன் ஆயவை பெண்ணைப் பொறுத்தே உள்ளது என்பாராய், "ஆண் மரம்; பெண் வேர்" என்றார்.

'நிழலில் நீங்கா என்மனைவி' என்று கணவனும்,

'திருமண நாளினும் இனியன் என் கணவன்' என்று மனைவியும் பாராட்டிய சங்கச் சான்றோர் வாக்குப் போல இம் மணமக்கள் வாழ்க்கை இனிது சிறப்பதாக என வாழ்த்தி அவையை வணங்கி,

வள்ளுவம் பரவ வேண்டும்
வாழ்வியல் துலங்க வேண்டும்
உள்ளுவ துயர்வு வேண்டும்
உரையெலாம் செயலில் வேண்டும்
எள்ளுவ தவிர்க்க வேண்டும்
ஏதிலார்ப் பொறுக்க வேண்டும்
கொள்ளுவ தறமாய் வேண்டும்
கொடைவளம் வேண்டும் வேண்டும்.

என்று வேண்டி, அனைவர்க்கும் நன்றி கூறி நிறைவு செய்கிறேன். இனி, வாழ்த்தும் பெருமக்கள் வாழ்த்துவர். மணமக்களை மலர்தூவி வாழ்த்தும் வகையில் மலரும் மங்கல அரிசியும் மண மேடையில் தட்டத்தில் உள. அவற்றை எடுத்துத் தூவி வாழ்த்துக. இன்பமே சூழ்க. என நிறைவு செய்தல். சென்றுவரும் வழி வாய்ப்பு இருக்கும் இடங்களில் மணமக்கள் அவையிடையே செல்லவும் அவையோர் மலர் தூவி வாழ்த்தவும் செய்தல்.

குறிப்பு:

சுருங்கிய அளவில் வாழ்த்துதல் நலம்; அஃது உரிய பொழுதில் மணச்சடங்கு நிறைவு பெறவும், விழாவுக்கு வந்தோர் விருந்தருந்தி விருப்பம்போல் செல்லவும் உதவும். வாழ்த்து என்பது வாழ்த்தாகவே அமைதல் வேண்டும்.

நன்றியுரை, விருந்துண்டு செல்ல வேண்டல் ஆகியவற்றுடன் விழா நிறைவுறும்.

மணவிழாவுக்கு வேண்டும் பொருள்கள்

மணமாலை 2

துணைமாலை 2

பெற்றோர் வழிபாட்டுக்குச் சரமாலை 4

திருவள்ளுவர் படம் (அ) சிலை

திருவள்ளுவர் படம் (அ) சிலைக்குச் சரமாலை 1

உதிரிப்பூ (அ) விடுபூ. ஒரு தட்டம்

கரைத்த சந்தனம் - ஒரு கிண்ணம்

விளக்கு - மணமக்கள் ஏற்றுதற்கு - எண்ணெய் - திரி-தீப்பெட்டி

திருமங்கல நாண் - பூட்டும் வகையில் (அ) விரல் ஆழி

தாய்மண் ஒரு தட்டத்தில் (மணமக்கள் வாழ்நில மண்)

நல்ல ஒலிவாங்கி - ஒலி பெருக்கி

மணமேடைக்குத் தக மேசை - இருக்கைகள், மங்கலப் பொருள்கள்

தவிர்க்க வேண்டுவன

மேடையில் கூட்டம் சேராமையைப் பேணுதல்

மங்கல அரிசி மலர் ஆயவை மணமேடையிலேயே வைத்திருத்தல்; அவையோர் நேரில் வந்து வாழ்த்தும் வகையில் அவற்றை உதவுதல் வேண்டும்; ஆதலால் அவற்றை அவையில் வழங்குதல் வேண்டா. வழங்கின் தூவார்; எறிவார்; முன்னவர் தலையிலேயே விழும்; காலில் மிதிபடும்.

இடவழக்கு குடும்ப வழக்குச் சடங்குகள் உண்டானால் அவற்றை மங்கல விழாவுக்கு முன்னோ பின்னோ செய்தல் . விழாவின் இடையே புகுந்து செய்யா திருத்தல்.

ஆரவாரம், அரசியல், கட்சி, சாதி, சமயப் பிணக்கு களுக்கு இடம் தராதிருத்தல்.

பெண்மையை இழிவு செய்யும் அம்மி மிதித்தல், அருந்ததி காணல் ஆயனவும் நலவாழ்வுக்கும் நல்வாழ்வுக்கும் ஆகாத காசிச் செலவு, எரி வளர்த்தல் என்பனவும் விலக்குதல்.

பிற்குறிப்பு

திருமணக் கரணத்திற்குக் குறைந்தது அரைமணியும், கூடியது முக்கால் மணியும் வேண்டும். ஆதலால் மணவேளை யில் பரபரப்பு இல்லாமல் நிறைவேற்ற உரிய காலத்தில் மணமக்களை மணமேடையில் இருக்கச் செய்தல் வேண்டும். காலம் தாழ்த்தி அமரச் செய்தல், எதிரொலி செய்யும் மண்டபம், செப்பமிலா ஒலிபெருக்கி ஆகியவை அமையாவாறு திட்ட மிட்டுச் செய்தால் விழா இனிது சிறப்பாக நிகழ உதவும்.

2. தமிழ்நெறித் திருமண உறுதி

திருமண உறுதி, மணமகள் இல்லத்தில் நிகழும்.

மணமகன் வீட்டார் பெண்பார்ப்பதும், பெண்வீட்டார் மணமகன் வீடு சென்று பார்ப்பதும் நிறைவேறி இருபக்கத்திலும் இசைவு ஏற்பட்ட பின், குறித்த நாளில் - நேரத்தில் - மணமகன் வீட்டார் உற்றார் உறவுடன் மண மகள் வீட்டுக்கு உரிய மங்கலப் பொருள்களுடன் வந்து இவ்வுறுதிவிழா நிகழும். மணமகன் வீட்டினரை மணமகள் வீட்டார் வரவேற்று மகிழ்வு தெரிவித்து மணவுறுதி செய்யும் வேளையில் உரிய இடத்தில் கூடி அமர்வர்.

இவ்வுறுதி நிகழ்வை முன்னின்று நடத்துபவர் அவையை வணங்கி அனைவரையும் வரவேற்று, அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள இருவீட்டார் சார்பிலும் அறிமுகப் படுத்துமாறு வேண்டிக்கொள்வார்.

அறிமுகம் முடிந்த பின்னர், மணமகள் வீட்டுக்கு மணமகன் வீட்டார் வந்ததற்கு நன்றி கூறி, அவர்கள் வருதற்குரிய காரணம் கூறுமாறு கேட்பார். மணமகன் வீட்டுப் பெரியவர் ஒருவர்,“எங்கள் குடும்பத்துப் பிள்ளைக்கு உங்கள் வீட்டுப் பெண்ணைப் பார்த்து மணம் செய்ய நாங்கள் அனைவரும் விரும்புவதால், அதனை உறுதிப்படுத்துவதற்காக வந்துள்ளோம். மண மகள் வீட்டார் நல்லுரை கூறி எங்கள் விருப்பத்தை நிறைவேற்றி இரண்டு குடும்பங்களும் இனிது தழைக்க வழிகாட்ட வேண்டும்” என்பார்.

உறுதி நிகழ்த்துபவர் தம் மகிழ்வையும் நன்றியையும் மணமகன் வீட்டார்க்குத் தெரிவித்துக்கொண்டு, மணமகள்

வீட்டுப் பெரியவரை, மணமகன் வீட்டார் வேண்டலை ஏற்று நல்லுரை தருமாறு வேண்டுகிறேன் என்பார்.

மணமகள் வீட்டார், மணமகன் வீட்டாரைப் போலவே நாங்கள் அனைவரும் ஒரே எண்ணமாய் அந்த மணமகனுக்கே எங்கள் பெண்ணைத் தர ஒப்புகின்றோம். அவர்களைப் போலவே எங்களுக்கும் முழுநிறைவான செய்தி இது. இனி, மேலே நடக்கும் செயலைச் செய்யலாம் என்பார்.

உறுதி நிகழ்த்துபவர், மணமகன் வீட்டார் கொண்டு வந்த மாலை மங்கலப் பொருள் உடை முதலியவற்றை மணமகன் தாய் மாமன் மாமியர் எடுத்து, மணமகளின் தாய்மாமன் மாமியர் கையில் வழங்குமாறு செய்வார். அவ்வாறே மணமகள் வீட்டார் மணமகள் வீட்டார்க்குரிய மங்கலப் பொருள்கள் வைத்த தட்டத்தை மணமகனின் தாய்மாமன் மாமியர் கையில் வழங்கு வார். இதற்குத் 'தட்டு மாற்றிக் கொள்ளுதல்' என்பது வழக்கம். தட்டு மாற்றிக் கொண்டாலே திருமணம் உறுதி செய்யப்பட்டது என்பது பொருளாகும்.

மாற்றிக் கொண்ட தட்டில் இருந்த உடையை மணமகள் உடுத்துக்கொண்டு அவர்கள் வழங்கிய மாலையை அணிந்து கொண்டு வருமாறு பெண்கள் ஏற்பாடு செய்வர்.பெண்ணின் தோழியர்கள் அப்பணியை மேற்கொள்வர். மணப்பெண்ணை அவைக்கு அழைத்து வந்து தட்டைப் பெற்றுச் செல்ல உதவுபவ ரும் அவர்.

பெற்றோர் உற்றார் உறவுகளுடன் மணமகனும் வருதல் உண்டு. வாராமல் பெற்றோர்களே உறுதி செய்யுமாறு இருத்தலும் உண்டு. அது முன்னரே உளத்தால் உறுதி செய்யப்பட்டது ஆகலின் வரவேண்டும் என்னும் கட்டாயமும் இல்லை.

மணமகள் புத்துடை உடுத்து வருதற்கு முன்னராக அவள் பெற்றோரும், மணமகன் பெற்றோரும் சந்தனம் பூசு சடங்கு

நிகழ்த்துவர். இருவீட்டாரும் எல்லா வழிகளிலும் இசைந்து செல்வதான சடங்கு இது.

மணமகளின் தாய் மணமகனின் தாயின் கையில் சந்தனம் பூசுவார்; அவ்வாறே மணமகனின் தாய், மணமகளின் தாயின் கையில் சந்தனம் பூசி மகிழ்விப்பார்.

மணமகளின் தந்தை மணமகனின் தந்தையின் கையில் சந்தனம் பூசுவார்; அவ்வாறே மணமகனின் தந்தை மணமகளின் தந்தையின் கையில் சந்தனம் பூசி மகிழ்விப்பார். திருமண உறுதிக்கு வந்தவர் அனைவருக்கும் சந்தனம் வழங்கப்படும்.

திருமணம் செய்யும் இடம், செலவு வகை, நாள், மண்டபம், இன்னவை பற்றிய பேச்சும் நிகழும். திருமண நாள் இன்னதென உடனே உறுதி செய்வதும் கலந்து பின்னர் முடிவு செய்வதும் என வாய்ப்புப் போல் நிகழும். பெரும்பாலும் அப்பொழுதே முடிவாகிவிடும்.

இந் நிகழ்ச்சிகள் முடிந்தபின் ஓலை எழுதுதல் என்னும் சடங்கு நிகழும். இன்ன ஊர் இன்னார் மகன் இன்னார்க்கும் இன்ன ஊர் இன்னார் மகள் இன்னார்க்கும் இன்ன நாளில் திரு மணம் நிகழ்த்துவதாக உறுதி செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டது என்றும். இவ்வுறுதிக்குச் சான்றாளர் இவர் இவர் என்றும் எழுதி இரண்டு படிகள் எடுத்து இருவீட்டாரும் ஒவ்வொன்று எடுத்துக் கொள்வர்.

நிறைவில் புத்துடை உடுத்து மாலையுடன் மணப்பெண் அவைக்கு வந்து, அங்கே வைக்கப்பட்டுள்ள விளக்கினை ஏற்றி மலர் தூவி வழிபட்டு அவையையும் வணங்கி அமர்வாள்.

மணமகனை மாலையுடன் பக்கமாக இருக்கச் செய்தலும் வழக்கமாகும்.

மணமகள் அமர்ந்தபின் இனிப்பு வழங்குதல், இலைபாக்கு வழங்குதல் என்பவை நிகழும்; இறைவணக்கம், இனிய பாடல்கள் இசைத்தல் என்பனவும் கொள்ளப்படும்.

ஒவ்வொன்றும் அமைவாகவும் சிறப்பாகவும் நிகழப் பொறுப்புடன் திருமண உறுதி செய்பவர் கடமையாற்றுவார். பெரும்பாலும் அவர் இருவீட்டார்க்கும் பொதுவானவராகவும், இருவீட்டாரும் மதிக்கத் தக்கவராகவும் இருப்பார். அவர் பேச்சும் செயலும் அனைவருக்கும் மகிழ்வும் நிறைவும் ஊட்டுவனவாக விளங்கும். நிறைவில் அனைவருக்கும் அவர் நன்றி கூறி, விருந்துண்ண வேண்டிக்கொள்வார்.

3. தமிழ்நெறிப் பிறந்த நாள் வாழ்த்து

ஒவ்வொருவர் வாழ்விலும் பிறந்தநாளே எல்லாவற்றுக் கும் முதன்மையான சிறந்தநாள். அப்பிறப்பு இல்லாவிடின் பின்னே உண்டாகிய சிறப்புகள் எல்லாமும் எய்தியிருக்க மாட்டாவே. ஆதலால் பிறந்தநாள் பிறந்தவர்க்கும் பெற்றோர்க் கும் பிறர்க்கும் மகிழ்வான நாளேயாம்.

பிறந்தநாளைப் பலர் நினைவளவில் வைத்துக்கொள்வர். பலர் வீட்டளவில் வைத்துக்கொள்வர். சிலர் வீட்டொடு உற்றார் உறவு அன்பு நண்புகளும் அறிய நிகழ்த்துவர். பள்ளிகளிலே பிறந்தநாள் வாழ்த்து காலை வழிபாட்டுக் கூட்டங்களிலேயே கூறிப் படிப்பார் அனைவரும் அறியச் செய்யும் வழக்கம் சில இடங்களில் உண்டு. பொதுத் தொண்டர், செல்வர், தொழில் முனைப்பாளர், அரசியல் தலைவர் என்பார்க்கு அவர்களைச் சார்ந்தவர்களே பிறந்தநாள் கொண்டாடுதல் உண்டு.

பிறந்த நாள் கொண்டாடுதல் மேலை நாட்டவர் வழக்கம் நம்மவர்க்கு இல்லை என்று எண்ணுவாரும் உள்ளனர். ஆனால் அவ்விழா தமிழ் மண்ணுக்குப் புதியது இல்லை. பழமையானது ஆகும்.

அரசர் குடும்பங்களிலும் பெருஞ்செல்வக் குடும்பங் களிலும் அவ்விழா நிகழ்ந்து வந்த சான்றுகள் உள. அவ்விழா பெருமங்கல விழா, பிறந்தநாள் பெருமங்கலம் என வழங்கப் பட்டது. அரசின் சிறப்பு விழாக்களில் மன்னர் பிறந்தநாள் பெரு மதிப்புக்குரிய நாளாகவே கொள்ளப்பட்டது.

பல்வேறு அறங்கள் புரிதல், பகைவர்க்கும் பரிவு காட்டுதல், சிறையில் இருப்பார்க்கு விடுதலை தருதல், கலை வல்லார்க்குப் பரிசுகள் வழங்குதல் தக்கார்க்கு விருது தந்து பாராட்டுதல், வரிநீக்கம் செய்தல் என்பனவெல்லாம் அந்நாளில் செய்யப்பட்டுள.

திருமடங்களின் தலைவர்களுக்கும் இத்தகு விழாக்கள் நடத்துதல் வழக்கமாம். இந்நாளில் பொதுமக்கள் அளவில் எனினும், தலைவர்கள் அளவில் எனினும் நொய்மம் (கேக்) வைத்து விளக்கேற்றி வாழ்த்துப் பாடி அந் நொய்மத்தை வெட்டி வழங்கியும் விளக்கினை ஊதியணைத்தும் பரிசு வழங்கியும் விருந்துண்டும் மகிழும் நிலையில் நிகழ்கின்றது.

வெட்டல், ஊதி அணைத்தல் என்பவை நம் மனத்தொடும் இயல்பொடும் ஒட்டாத அயல்நெறிகளாம். ஆதலால் நம் பண்பியலுக்கு ஏற்ப அமைத்தலைக் கருதலாம்.

பிறந்த நாள் கொண்டாடுபவரை நீராட்டி, புத்துடை உடுத்து அமைவான இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். அமர இயலாததும் தனியே இருக்க முடியாததுமாம் குழந்தை எனின். தாய் அமர்ந்து தம் மடியில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

வந்துள்ள பெரியவர்களுள் ஒருவரை விழாத் தலைமை ஏற்குமாறு வேண்டியுரைத்தும் வழிமொழிந்தும் விழாவைத் தொடங்கலாம். முன்னரே தலைவர் ஒருவரைத் திட்டப்படுத்தி யிருக்கவும் செய்யலாம்.

தலைமை ஏற்றபின் இல்லத்தார் சார்பில் வரவேற்புக் கூறல் இறைவாழ்த்து மொழி வாழ்த்து என்பவற்றை இசைத்து விழாத் தொடங்குதல்.

தலைமையேற்றவர் குத்துவிளக்கில் ஒரு திரியை ஏற்றி ஒளிவிடச் செய்து வாழ்த்துதல். பிறந்தநாள் கொண்டாடுபவர் மற்றொரு திரியும். பெற்றோர் ஒரு திரியும், வந்திருக்கும் தாய்

மார்கள் சார்பில் ஒரு திரியும், ஆடவர்கள் சார்பில் ஒரு திரியும் ஏற்றி ஒளிவிடச் செய்தல்; மலர்தூவல்.

விளக்கேற்றுதல் பொருளை விழாவுக்கு வந்துள்ள அனைவரும் அறியுமாறு தலைவரோ வாழ்த்துபவருள் ஒருவரோ விளக்கிக் கூறுதல். ஒளிதோன்றியவுடன் இருள் அகலும் அச்சம் அகலும். எங்கும் நிறைந்த ஒளிவடிவமான இயற்கையை நாம் வாழும் இல்லத்தில் உறைவதாகக் கொண்டு ஏற்றி வழிபடுவதே விளக்கேற்றல் ஆகும்.

மாலைப்பொழுதில் கதிர்மறையத் தொடங்கும் வேளையில் நாள்தோறும் விளக்கேற்றி மலர்தூவி வழிபடுதல் நம்மவர் பழைய வழக்கம். திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என்று தொடங்கிய சிலப்பதிகாரம்,

"அகநகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த.
மாலை மணிவிளக்கம் காட்டி இரவிற்கோர்
கோலம் கொடையிடையார் தாம் கொள்ள"

என்று கூறுகின்றது. (கனாத் திறம் உரைத்தகாதை)

விளக்கேற்றுதல் நம்முன்னவர்களை வழிபடும் இல்லுறை தெய்வ வழிபாடு ஆகும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

"தந்தை தாய்ப் பேண்"

என்பவை ஔவையார் உரை. அவ்வன்னையர் தந்தையர் மட்டுமா நம் முன்னோர்? எத்தனை எத்தனையோ ஆயிரம் பரம்பரை வழிவந்தவர்கள் நாம். நம்முன்னவர்கள் கொடையே நம் வாழ்வில் பெறும் வளங்களுக்கும் மொழி கலை பண்பாடு ஆயவற்றுக்கும் மூலம். அவற்றைப் போற்றி நன்றி பாராட்டும் வகையாலும், நமக்குப் பின்னவரும் இந்நெறியைக் கடைப் பிடிக்கும் வகையாலும் விளக்கு ஏற்றப்பட்டது.

இவ்விளக்கேற்றல் விளக்கம் மேலும் விரிவுடையது. கற்றவர் குடும்ப வாழ்வுக்கும், கல்லாதார் குடும்ப வாழ்வுக்கும் வேறுபாடு உண்டு. அவற்றை வெளிப்பட அறிய விரும்புவார் பாவேந்தர் இயற்றிய குடும்ப விளக்கு. இருண்ட வீடு என்னும் இரண்டையும் பார்த்தல் போதும்.

கல்வியாவது உள்ளொளி. கல்வி ஒளி இல்லாக் கண்ணொளி கூடப் பாராட்டப்படுதல் இல்லை. கல்விக்கண் திறக்கும் ஆசிரியன் இறைவன் என்றே கூறப்பட்டமை. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதால் புலப்படும்.

வாழ்நாளில் ஒருவர் தம் இயல் செயல்களால் அடையும் பெருமையை நம் முன்னோர் 'ஒளி' என்றே குறித்தனர். வாழ்வின் பின்னர் அடைவதே புகழ் என்றும் கூறினர். "நின்ற ஒளி" என்றார் திருவள்ளுவர். "உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்" என்பதால் ஒளி, புகழ் என்பவை வேறாதலை விளக்கும் நாலடியார். ஆதலால் பிறந்தநாள் காண்பார் ஒளி, புகழ் என்பவற்றை வாழ்த்தும் வகையால் கூடியுள்ள நாம், ஒளியைப் போற்றுவோம்; மலர் தூவுவோம் என்று ஒளி வழிபாடு செய்தல்.

ஒளியே போற்றி!

உயர்வே போற்றி!

களியே போற்றி!

கனிவே போற்றி!

அளியே போற்றி!

அறமே போற்றி!

தெளிவே போற்றி!

திறமே போற்றி!

எனப்போற்றி மொழி கூட்டாக இசைத்தல்.

பாடல்வல்ல பயிற்சியர் வழியே குழந்தையின் பெயர் பெற்றோர் பெயர் ஆயன இணைந்த வாழ்த்துப் பாப் பாடச் செய்தல். வாழ்த்துப் பாடல்கள் ; சில

மகிழ்வு மிக்க பொன்னாள்! – நீ
மகவாய்ப் பிறந்த இந்நாள்!
பெருகிப் பெருகி வருக! – நற்
பேறு யாவும் தருக!

– மகிழ்வு மிக்க...

பனியின் மலரே நீதான் ! – நற்
பாலின் மதியே நீதான்!
கனியின் சுவையே நீதான்! – எம்
கடவுள் வடிவே நீதான் !

– மகிழ்வு மிக்க...

பெற்றோர் பெற்ற பேறே! – நின்
பிறவி யுற்ற பேறே!
சுற்றம் சூழும் பேறே! – நீ
சுடராய் ஓங்கி வாழ்க!

– மகிழ்வு மிக்க...

கண்ணின் மணியே வாழ்க! – நற்
கலையின் வளமே வாழ்க!
மண்ணின் நலமே வாழ்க! – சீர்
மலரும் வாழ்வே வாழ்க!

– மகிழ்வு மிக்க...

மனையின் விளக்கே வாழ்க! - எம்
மாண்புக் கிருப்பே வாழ்க!
நினையும் பேறே வாழ்க! - நீ
நீடு நீடு வாழ்க!

- மகிழ்வு மிக்க...

வாழ்த்து இசைத்தபின் பெற்றோர் சிறுகரண்டி கொண்டு 'தேன்மா' எடுத்து நாவில் வைத்தல். குழந்தை வைக்க முடியும் எனின், பெற்றோர்க்கு அவ்வாறே எடுத்து ஊட்டல். பிறர்பிறர்க் கும் வழங்கச் செய்தல். வளர்ந்த குழந்தைஎனின் அதுவே வழங்குதலும் வழங்கப் பெறுதலும்.

தலைவர் வாழ்த்துரையும், வாழ்த்துநர் உரைகளும். இசைவல்லார் இனிய பாடல் இசைத்தலும் கொள்ளலாம்.

குழந்தையின் பிறந்த நாளை முன்வைத்து வந்துள்ளவர் களுக்குக் குழந்தைகளின். பெயர், வளர்ப்பு முறை, கல்வி கற்பித்தல், பண்பாட்டில் பயிற்றல், உலக மகவாக வளரச் செய்தல், மாந்த நேயம் ஆன்மநேயம் தானே உண்டாகத் தக்க வகை செய்தல் என்பவற்றுடன் வாழ்த்தும் கமழ உரைத்தல்.

பரிசு வழங்குதல்; விருந்தோம்பல் ; நன்றியுரைத்தல் என்பவற்றுடன் நிறைவித்தல். நிறைவாகத் திருக்குறள் போற்றி மந்திர மொழிகளை உரைத்தல். (திருக்குறள் போற்றி மந்திர மொழிகள் பின்னே இணைக்கப்பட்டுள)

4. தமிழ்நெறிப் பெயர் சூட்டு விழா

தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் உயிர்நாடியாக உள்ள விழா, மக்களுக்குப் பெயர் சூட்டும் விழா.

தமிழர் என்பதற்குரிய முகவரியே பெயர்தான்.

அப்பெயரே தமிழில்லை என்றால், முற்றாகத் தமிழன் முகவரியை இழந்தவனே ஆவன்.

சங்ககாலப் புலவர் பெயர்கள், அரசர் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், திருக்கோயில் பெயர்கள், இறைவர் பெயர்கள் என்ப வற்றை எண்ணிப் பார்ப்பவர்க்கு, முற்காலத் தமிழ்ப் பெயர்களின் தூய்மை தனித்தன்மை ஆகியவையும், வரவரப் பிற்காலப் பெயர்களின் கலப்பும் பொய்யும் புனைவும் வரலாற்று ஏய்ப்பும் புலப்படும்.

அயலார், தமிழ் அரசர்களைத் தம் வயப்படுத்தித் தமிழ் மொழிக் கேட்டை அவர்கள் வழியாகவே செய்தமையை இராச ராசன். இராசேந்திரன் சுந்தரபாண்டியன் அரிமர்த்தனன் முதலாய பெயர்கள் காட்டவில்லையா? பல்யாக சாலை முது குடுமி, இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி என்பார் பெயர்கள் காட்ட வில்லையா?

இம்மாற்றங்களின் விளைவு என்ன? தமிழிசை கர்நாடகஇசை ஆயது, தெலுங்கிசையும் ஆயது. தமிழ்வழிபாடு வடமொழி வழிபாடு ஆயது. ஆங்கிலர் வரவால் முறைமன்றம் ஆட்சி கல்வி எல்லாமும் ஆங்கிலம் ஆயன. தமிழின் ஆக்க மெல்லாம் ஒடுக்கப்பட்டு. அயன்மொழி – அயன்மொழியார்–

வல்லாட்சி வெறித் தாக்குதல் தொடரவே செய்கின்றன. இவற்றுக் கெல்லாம் மூலத்தீர்வு தமிழர் அடையாள அட்டையாக -ஆவண மாக இருக்க வேண்டியது. அவர் பெயர் தமிழாக இருப்பதே.

இவ்விழாவைக் குடும்பவிழா, தெரு விழா, ஊர் விழா, விழாவுக்குள் விழா, சிறப்பு விழா, மாநாடு ஆகிய எல்லா இடங்களிலும் நிலைகளிலும் போற்றிச் செய்ய வேண்டியதே உடனடித் தேவையாகும்.

'பெயரில் என்ன இருக்கிறது? என்பார் 'பேயர்'அல்லர். அவர் அயன்மொழி வெறிப் பேயர். உடுக்கடியாமலே வெறி யாட்டம் ஆடும் பேயர்! பெயரில்தான் எல்லாமும் உள்ளது. என்று உணர்ந்து, செயல்படுபவர் மானமமைந்த தமிழர். தம் பெயர் அயற்பெயர் என்று உணர்ந்தும் தம் பெயரை மாற்றிக் கொள்ளாதவர் அக்குற்றத்திக்குக் கழுவாய் தேட எண்ணினால், தம் அயற் பெயரை மாற்றிக் கொள்ளல் - புனைபெயராக வேனும் மாற்றிக் கொள்ளல் கடன். கழுவாயாகத் தம் குடியில் வருவார் பெயர்களையெல்லாம், ஆயிரம் ஆயிரமாகத் தமிழில் வைத்துக் காட்டுதல் வேண்டும். அதற்கு விழா எடுத்து ஊக்குதலும் தேவை.

பெயர் சூட்டுவிழா நிகழ்த்தத் திட்டமிடுவார், மொழிப் பற்றுமை உடையவர் எனின், மொழிப் பற்றிலார்-அயன்மொழி வெறியர் - கையில் தந்து, பெயர் சூட்டச் சொல்லல் கட்டாயம் கூடாது. கணியம் பார்த்துக் கதைப்பார் கருத்துவழி நிற்றலும் கூடாது.

பற்றுடைய தமிழர் எனினும், என்ன பெயர் சூட்டப் போகிறார் என்பதை அறிந்து கொள்ளாமல் அவர் பொறுப்பில் விட்டுவிடல் கூடாது. ஏனெனில், தமிழ்ப் பெயர் அயற்பெயர் என்னும் தெளிவின்றி அயற்பெயரையே தமிழ்ப் பெயராக அவர் கருதிக் கொண்டிருக்கக் கூடும். ஏன் இவ்வளவும் என்றால்,

ஏதோ ஒரு பெயரைச் சூட்டிச் செல்ல, அப்பெயரும் தமிழ்ப் பெயராகாததாக அமைந்துவிட, பெயர் வைத்தவரை நோக்கி அப்பெயரை மாற்றக் கூடாது எனப்போற்றி வர ஏற்பட்டு விடலாம். பெயர் மாற்றம் செய்யவிரும்பின் அதனைக் குற்ற மாகக் கருதும் அறிஞர்களும் இம்மண்ணில் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

இருபிறப்பு என்னும் போலிமை காட்டிப் புதுப்பெயர் வைப்பவர், துறவுகொண்டதும் பெயர் மாற்றிக் கொள்பவர், அரசு மேற்கொள்ளும் நிலையில் புதுப்பெயர் சூட்டல் என்பனவெல் லாம் அறிந்த, 'அவர்கள் தாம்' சொல்லுகிறார்கள், "சூதுவாது வஞ்சம் ஏமாற்று உடையவரே, பெயர் மாற்றிக் கொள்கிறார்கள்" என்று. இவ்வேமாற்றுக்காரர் சொல், அடிப்படையை அழிக்கும் சொல்; சூழ்ச்சிச் சொல் - என்பதை உணர்ந்து விழிப்பாக இருக்க வேண்டும். இனிப் பெயர் சூட்டல் நிகழ்வைக் கருதலாம்.

குடும்பச் சார்பாக, விழாவுக்கு வந்தவர்களை ஒருவர் வரவேற்று இன்னார் பெயர் சூட்டியருளுமாறு வேண்டுகிறோம் என விழாவைத் தொடங்கி வைத்தல்.

குழந்தையின் தாத்தா பாட்டியர் இருப்பின் அவர்கள் கையில் பெயர் சூட்டப்படும் குழந்தையைத் தருதல் வேண்டும். இல்லையேல் பெற்றோர் தம் கையில் வைத்திருத்தல் வேண்டும். பெயர் சூட்டுவார் அக் குழந்தையைக் கையில் வாங்கியோ அவர்கள் கையில் இருந்தவாறோ அமைந்த மனத்தோடு முழுமுதல் இறையருள் இக்குழந்தைக்கு எய்துவதாக என உள்குதல் வேண்டும். தூயமனத்தோடும் நிறைவான எண்ணங்க ளோடும் அமைவாகக் குழந்தையின் உச்சி முதல் உள்ளங்கால் வரை மும்முறை கைகளால் வருட வேண்டும்.

இறையே வடிவாக எழுந்தருளிய இக்குழந்தை,

நிறைவாழ்வும் நிறைபேறுகளும் பெறுவதாக!

நல்லுடல் நல்லுளம் நற்செயல் ஆகிய மும்மையும்
மல்கியும் பல்கியும் திகழ்வனவாக!
இன்ப நிலையமென இவ்வில்லத்தை
இக்குழந்தை பிறப்பும் வளர்ச்சியும் ஆக்குவனவாக!
பெருந்தக்க இக்குழந்தைக்கு, உங்கள் அனைவர்
சார்பாகவும் யான் இந்த நல்ல பெயரைச் சூட்டுகிறேன்

என்று சொல்லிப் பெயரைச் சொல்லல்.

மும்முறை அப்பெயரைக் குழந்தையின் காதருகே மெல்லென ஓதி, அருகில் உள்ளார் அனைவரையும் தாம் பெயரைக் கூற, 'வாழ்க!வாழ்க! என வாழ்த்துமாறு செய்தல்.

குழந்தையின் நாவில் தேன்துளி தடவல். பரிசு வழங்குதல் வாழ்த்துதல் தொடரச் செய்தல். நிறைவில் விருந்தோம்பல்.

நன்றியுரைத்தல்.

தமிழில் பெயர் அரிதா?

அன்பு, அருள் – இருபாலுக்கும் அரிய பொதுப் பெயர்கள் அல்லவா.

அன்பரசன்	அருள்அரசி
அன்பண்ணல்	அருள்மணி
அன்பாளன்	அருள்மொழி
அன்புமணி	அருட்செல்வி
அன்புநம்பி	அருட்குவை
அன்புவாணன்	அருளிறை
அன்புமொழி	அருளாயி
அன்பு வேந்தன்	அருளம்மை
அன்புவேள்	அருள்நங்கை
– இப்படி எத்தனை?	இப்படி எத்தனை?

ஒருபால் பெயரை, மறுபால் பெயராக மாற்றல் அரிதா?

அருளரசன்	அருளரசி
அருட்செல்வன்	அருட்செல்வி
அருள்நம்பி	அருள்நங்கை

இம்மட்டோ அரசன், அண்ணல், அரசி, மணி என்றும் தனிச் சொற்களும் பெயர்களாக அமையுமே!

அன்பு அருள் என்பவற்றைப்போல் மணி, முத்து, பொன், பூ என்பவற்றொடு ஒட்டியும் தனித்தும் எத்தனை எத்தனை இருபாற் பெயர்களை உண்டாக்கலாம்.

எப்படியாயினும் சிதைவிலா முழுமை பெயர்களில் அமையும் அல்லவோ!

சுப்பிரமணியன் எனவைத்து 'ரமணி' ஆக்கவும், பரமேஷ் வரன் என வைத்து 'ரமேஷ்' ஆக்கவும், திரவியம் என வைத்து 'ரவி' ஆக்கவும், பிரகதீஸ்வரன் என வைத்து 'ரதீஸ்' ஆக்கவும் சிதைக்கவும் பொருளற்ற தாக்கவும் வேண்டாவே. இவற்றை முறையே முருகன், சிவன், திருவன் பெருவுடையான் எனக் கொண்டால் அக்குறைகள் அகன்றொழியுமே. தமிழிருக்கையும் ஆகுமே!

5. தமிழ்நெறிக் காதணி விழா

பழந்தமிழர் காதணி பூண்டனரா?
காது குத்துதல் தேவையா?
அதனைத் தவிர்க்கலாமே!
பிற நாட்டார் இதனைப் போற்றவில்லையே!

இன்னவாறு எண்ணுவார் உளர்.

காதுக்குத் துளையிடல் இறைவனுக்குச் சம்மதமற்றது. இறைவனுக்குச் சம்மதமாயின் ஒன்பான் துளைகளை வைத்த இறைவன் காதணிக்கும் துளை வைத்திருக்கமாட்டானா?

என்பது வள்ளலார் பெருமான் அருள்வினா!

"அம்மா காதுக்கு ஒரு தோடு– அதை
வாங்கி வந்து நீ போடு"

என்பது குழந்தையின் வினா

"சான்றோர் உரையே நல்ல தோடு – அதை
மறவாது நீ போடு"

என்பது தாயின் மறுமொழி! இவ்வகையில் கூறியவர் புரட்சிப் பாவேந்தர்.

'வடிந்துவீழ் காது'– கண்ணகியார் காது பற்றிய இளங்கோ வடிகள் உரை.

'தோடுடைய செவியன் '– பிள்ளையார் மொழி.

காதணிகலங்கள் ஒன்றா இரண்டா? தமிழ்நாட்டு அணி கலங்கள் என்னும் நூல் திரட்டித்தந்துள்ளது. அ. இராகவனார் இயற்றியது அது.

“காதொளிரும் குண்டலமும் கைக்குவளை யாபதியும்” என்பது சுத்தானந்த பாரதியார் பாடிய தமிழ்த் தாய் வாழ்த்து.

ஆடவர் மகளிர் என வேறுபாடு இல்லாமல், பழநாள் தொட்டே காதணிகலம் கொள்ளல் தமிழக நடைமுறையாக இருந்துளது.

தொல்பழங்குடிகள் எனப்படுவார் அனைவரும் காது மூக்குகளைத் துளையிட்டு அணிகலம் பூண்டனர் என்பது உலக வரலாறு. அல்நாகரிகம் எனப் பழமையறியாப் புது நாட்டினர் கருதும் அதுவே, பழமையரால் நாகரிகமாகப் போற்றப்பட்டது; தொடர்ந்து வருதலும் ஆயது. இன்றும் காதணிவிழா தொடரலால் அதுபற்றியும் கருத வேண்டியுள்ளது.

கர்ண பூசணம் என அயலவர் இட்ட பெயர் வழக்கை மாற்றித் தமிழ் முறைப்படி ‘காதணி விழா” என வழங்கப் பட்டதே. அந் நடைமுறை உள்ளதால்தானே!

இனிய செய்தியைக் ‘செவிநுகர் கனி’ என்பார் கம்பர்.

‘செவியணி விழா’ எனப் பெயர் சூட்டி வழங்கலும் வழக்கே. காதணி விழா தனி விழாவாகவும், மணவிழாவொடு சார்பு விழாவாகவும் கோயில் விழாவாகவும் நிகழ்கின்றன. மொட்டை போட்டுக் காதுகுத்தல், மொட்டை போடாது காது குத்தல் என இருவகை வழக்கும் நடைமுறையில் உள்ளனவே.

காதுகுத்துதல், நாளும் பொழுதும் திட்டமிட்டு அழைப்பிதழ் அடித்துப் பெருவிழாப் போல் நிகழ்த்துவதும், குடும்ப அளவில் நிகழ்த்துவதும் வழக்கம்.

புத்துடை உடுத்து, மாலை அணியச் செய்து காது குத்த வேண்டிய குழந்தையைத் தாய்மாமன் மடியில் வைப்பர். காது குத்தும் கலைவல்லார், காதில் இடம் பார்த்துத் திறமாகக் குத்துவார். விளையாட்டு வேடிக்கை காட்டிக் குழந்தை

அழுகையை மாற்ற வேண்டிப் பலப்பல செய்வர். சுவையான பண்டங்கள் பழவகைகள் வழிபாட்டுப் பொருள்கள் பரப்பப் பட்டிருக்கும்.

குத்துவிளக்கேற்றல் நிறைநாழி வைத்தல் என்பனவும் உண்டு. செய்முறை வழக்கமும் உள்ளது. விருந்து வழக்கமானது. காதணி விழாவுக்குத் தலைவர், முன்னிலையர், வரவேற்பாளர் வாழ்த்தாளர் எனப்புதுமையாகச் செய்வதும் கண்கூடு.

> ***"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்***
> ***செல்வத்துள் எல்லாம் தலை"***

என்பது வள்ளுவம் இது கேள்விச் செல்வச் சிறப்பு.

காது குத்துமுன்னே ஒரு குழந்தை இயற்கை எய்தி விட்டால் அதற்குக் காதுகுத்தி இறுதிக் கடன் செய்யும் வழக்கம் இன்றும் உள்ளமை, நம்முன்னவர் கொண்ட மரபு வழிக் கடன் இது என்பது காட்டும். இதனை வீரவழிபாடு என்றும் கூறுவர். புறநானூற்றில் "குழவி யிழப்பினும் ஊன் தடி பிறப்பினும்" என்னும் மானமிகு சேரமான் பாடிய பாட்டு உள்ளமை இவ் வீரச் சான்றாகக் காட்டுதல் வழக்கம்.

6. தமிழ்நெறிப் பூப்பு நீராட்டு விழா

பழங்காலம். பெரிதும் சமுதாய ஒப்பந்தக் காலம்; ஒருவர் வாழ்வுக்காக ஒருவர் வாழ்ந்த காலம்; அவ்வொவ்வொருவரும் கூடியமைந்த சமுதாய ஒப்பந்தக் காலம். இதனை விளக்கும் சடங்குகளுள் ஒன்று பூப்பு நீராட்டு என்பது.

இதனை மஞ்சள் நீராட்டு என்றும், சடங்கு என்றும் கூறுவதும் உண்டு. பூப்பின் அடையாளம், அவள் வாழ்வுக்குத் தக அமைதல் ஆனாள் என்பதாம். 'பூப்பு' என்னும் சொல் தொல்காப்பியர்க்கும் முற்பட்ட பொதுமக்கள் வழக்குச் சொல் லாகும். முதுக்குறைத லென்பதும் அது.

பூப்பு நீராட்டு, மகளிரே கூடி நடத்துவதாகும். ஒருபெண் பருவம் அடைந்தால் அதனை அறிந்த அவள் அச்சம் அடைந் தாலும் குடும்பத்தவரும் உறவினரும் மகிழ்ந்து, அவளைச் சீராட்டிப் பாராட்டுவர். அதன் அடையாளம் பூப்பு நீராட்டு ஆகும். மஞ்சள் கலந்த நீரால் முழுக்காட்டுதலால் மஞ்சள் நீராட்டு எனவும் வழங்கப்படும்.

மகளிர் பூப்பு நீராட்டி, புத்துடை உடுத்தி, மலரும் மாலை யும் சூட்டி மகிழ்வர். அதனை அவ்வளவில் நிறுத்தாமல் மாலை யுடன் அமரச் செய்து பரிசு வழங்குதலும் வாழ்த்துரைத்தலும் உண்டு. இசை நலங்கனிந்த வாழ்த்தும் மகளிர் பாடுவதுண்டு.

சிற்றூர்களில் மகளிர் குரவை(குலவை)யிடுதல் வழியாகப் பூப்படைந்தமையை ஊரறியச் செய்வர். ஆண்பிள்ளை பிறந்தால் குரவையிடும் வழக்கமுடைய அவர்கள் பெண் பிள்ளை பிறந்தால் குரவை இடுவது இல்லை. அவர்களே அப் பிறப்புக்கு மகிழவில்லை என்பதை அடையாளப்படுத்துவது

போல் இருப்பினும். ஒரு பெண் பூப்படைந்ததற்குக் குலவை யிடுதல் தாய்மை வழிபாடு போல் திகழ்கின்றது.

குலவை ஒலியால் ஊரும் உறவும் அறிய அவர்கள் அதனையே அழைப்பாகக் கொண்டு அவ்வீட்டுக்கு வந்து விடுவர். தாய்மாமன் புத்துடை, மாலை முதலியவை வழங்குதல் முறையாக உள்ளது.

பூப்புநாள் தொட்டு அதற்குரிய விழா நிகழ்த்தவுரிய காலம் வரை உற்றார் உறவினர் அனைவரும் பூப்படைந்த பெண்ணுக்குப் பழங்களும் ஊட்டமிக்க உணவுகளும் இனிய பண்டங்களும் வழங்குவதைக் கடமையாகக் கொள்வர். ஒரு குடும்பத்துக்கு உறவான பல குடும்பங்களும் தாமே விரும்பிச் செய்யும் உதவிக் கடனாக இச்செயல் அமைகின்றது. திருமணம் முடிந்தபின் மண மக்களை விருந்துக்கு அழைக்கும் முறையும் இத்தகையதே.

இந்நாளில் பூப்பு நீராட்டு விழா அழைப்பிதழ் அடித்தலும், திருமண மண்டபம் முதலிய அரங்குகளில் நடத்துதலும், மணவிழா வாழ்த்துப் போல் வாழ்த்துதலும், மொய் செய்தலும், விருந்து நிகழ்த்துதலும் ஆக நிகழ்கின்றன. பின்னே கூறிய முறையில் நிகழும் விழாவில் தலைவர் வாழ்த்தாளர் என்பார் அன்றி ஆடவர்களும் மிகுதியாகக் கலந்து கொள்வர்.

பூப்பு நீராட்டு விழாவைத், திருமண விழாவுக்கு முதல் நாளில் அல்லது முற்பட நடத்தி அக்குறையின்றித் தீர்த்ததாக நிறைவு கொள்ளுதலும் வழக்கம்.

இக்காலச் சூழல், மகளிர் பணி நிலை, கல்வி என்பவற்றை எண்ணிப் பார்த்தால் வீட்டளவில் இந்நிகழ்வை வைத்துக் கொள்ளலே நலம் என முடிவு செய்யலாம். தொடர்ந்து படிக்க விரும்பும் பிள்ளைகள் இந்நிகழ்ச்சியை ஊருக்கு வெளிப்படுத்தி விழாவாக்க விரும்புவது இல்லை என்பது பலரும் அறிந்தது.

7. தமிழ்நெறி வளைக்காப்பு விழா

வயிறுவாய்த்த மகளைப், பெற்றோர் புகுந்த வீட்டில் இருந்து மகப்பேற்றுக்காகப் பிறந்த வீட்டுக்கு அழைப்பது இவ் வளைக்காப்பு விழாவாகும். பெரும்பாலும் மகளிரே நிகழ்த்தும் விழா இது.

வயிறு வாய்த்த மகள் நீராடி, புத்துடை உடுத்து, மாலை சூடி வாய்ப்பான இருக்கையில் இருக்க மகளிர் சூழ இருந்து இச் சடங்கை நிகழ்த்துவர். கணவரையும் மாலையுடன் அமரச் செய்தலும் உண்டு. முதிய மகளிர் சிலர் முன்னின்று இச்சடங்கை நடத்துதல் வழக்கம். ஏறத்தாழ அனைவரும் மலர்ந்த முகத் தோடும் மகிழ்வோடும் திகழ்வர். அரிதாக அவ்விடத்தில் ஆடவர் சிலரும் இருப்பர். மற்றை ஆடவர்தம் வாய்ப்புப் போல் வேறு இடங்களில் அமர்ந்திருப்பர்.

இசைநலம் வாய்ந்தவர் தாம் தாம் வழிபடு தெய்வப் பாடல்களைப் பாடுவர்; விளக்கேற்றி வழிபடுவர். வந்தவர் களுக்குச் சந்தனமும், பூவும் தருவர்.

வேம்பின் இளவளார் ஒன்றினைக் காப்பு வளையலாகச் செய்து முதற்கண் அணிவிப்பர். பின்னர்த் தத்தம் விருப்பம் போல் வளையல்களை ஒவ்வொருவராக அணிவிப்பர். தங்கம், வெள்ளி ஆயவற்றால் வளையல் தொடுத்தலும் உண்டு. சந்தனம் பூசுதல், பன்னீர் தெளித்தல் ஆலத்தி எடுத்தல் என்பன வும் நிகழ்வது வழக்கம். இடை இடையே வாழ்த்து வகைப் பாடல்கள் மகளிரே பாடுவர். புது வழக்கமாகத் தக்க ஒருவரோ சிலரோ வாழ்த்துரை வழங்குதல் ஏற்பட்டுள்ளது.

வயிறு வாய்த்த மகளார் உடல்நலம் பேணல், மனநிறைவு கொள்ளத்தக்க எண்ணங்களையே எண்ணல், அமைந்த இயல்பினளாய்த் தாம் ஓர் உயிரைத் தாங்கி அவ்வுயிரே தம் உயிராகப் பேணிச் செயலாற்றல், நல்ல நூல்கள், இனிய இசை, மகிழ்வூட்டும் இயற்கை, உள்ளொத்த அன்பின் உரையாடல் இன்னவற்றில் பொழுது செலவிடல், முழுதாக ஓய்ந்திராமலும், வியர்வை வர உழையாமலும், அதிர்வு எதற்கும் ஆட்படாமலும் நோன்புடையவள் போல் மகிழ்வு, கலகலப்பு, நிறைவு ஆகிய வற்றிற்கு இடமாக வாழ்தல், உணவு வகையிலும் உடைவகையி லும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் வகையிலும் பேணத்தக்க கடைப்பிடிகள் ஆகியவற்றைக் கூடியுள்ளோர் மனங் கொளவும் மகிழ்வுறவும் கூடிய வகையில் எடுத்துரைத்தலும் வாழ்த்துதலும் செய்வர்.

வளைக்காப்புக்கு மற்றொரு பெயர் 'கட்டுச்சோறு' என்பது.

வழக்கமான சோறு, சாறு, குழம்பு, மோர், தொடுகறி, விடுகறி என்பவை இல்லாமல், கற்கண்டுச் சோறு, புளிச்சோறு, தேங்காய்ச் சோறு, காய்கறிச் சோறு, தயிர்ச்சோறு, பருப்புச் சோறு என்பவை போலச் செய்து வந்தவர்களுக்கெல்லாம் வழங்கித் தாய்வீட்டுக்கு அழைக்கும் வழக்கத்தால் 'கட்டுச்சோறு' என நிகழ்ச்சி வழங்கப்படுவதாயிற்று.

ஒரு பெண், தாய்மையடைதலை ஒரு பெரும் பேறாகக் கருதுவது இயற்கை. அக்கரு நல்ல வகையில் வளர்ந்து வயிறு வாய்த்துத் திகழ்வது அப்பெண்ணுக்கே அன்றி உறவுடையார்க் கெல்லாம் உவப்பாதல் எவரும் அறிந்தது. அவ்வுவப்பின் விழா 'வளைக்காப்பு ' விழா.

அடுத்துவரும் மகப்பேற்றை மகிழ்ந்து எடுக்கப்படும் இவ்விழா, வயிறு வாய்த்தவரும், அவரைச் சார்ந்தவரும், பிறரும்

எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதைக் கற்பிக்கும் கலை விழா எனல் தகும்.

வாழ்வாங்கு வாழ்தல் கூறிய வள்ளுவர்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்று அருமையுரைத்ததைப் பாராட்டி மகிழும் பேறும் இஃதாகும்.

8. தமிழ்நெறிப் புதுமனை புகுவிழா

மக்கட்பெருக்கம் ஏற்பட, ஏற்பட மனைகள்பெருக்கம் ஆதல் இயற்கை. அவ்வகையில் புதுப்புது மனைகள் கட்டப் படுவதும், அதற்குப் புகுவிழா நிகழ்த்துவதும் நடைமுறை.

கணவன் மனைவியர் ஆகிய இருவர் தம் மனையற வாழ்வுக்காகத் தனிமனையில் வாழ்தல் பழநாளே உண்டு என்பது சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துக் காதையை அடுத்தே மனையறம்படுத்தகாதை அமைத்தமையால் புலப்படும்.

கோவலன் ஒருவனே மாசாத்துவானுக்கு மைந்தன்.
கண்ணகி ஒருத்தியே மாநாய்கனுக்கு மகள்.

எனினும் வளமனைகளையுடைய அவர்கள் தம்மக்களை மனையறம் புரியும் வகையாகத் தனிமனை அமைத்துத் தருகின்றனர். கலித்தொகைத் தலைவி ஒருத்தி, பிறர் கட்டிய வீட்டில் வந்து யான் வாழேன் நாமே வீடு கட்டி வாழ்வோம் என்று கூறும் குறிப்பு உண்டு.

தாம் கட்டிய வீட்டில், தம் உழைப்பால் வந்த உணவைப் பிறர்க்கு உதவித் தாமும் உண்டு வாழ்தல் இனிய தன் மனைவி யோடு அடையும் இன்பத்திற்கு இணையாம் என உவமை காட்டி முப்பாலையும் ஒரு பாவில் கூட்டியுரைக்கும் வள்ளுவம் ஊன்றி நோக்கத் தக்கதாம். அது,

“தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு”

என்பது (1107) அது

ஆதலால் புதுமனை புகுதல் என்பது இல்லறக் கடமை புரிய ஏற்படுத்திக்கொள்ளும் இனிய வாய்ப்பு என்றும், உறவுக் குடும்பத்துடன் மேலும் நல்லுறவாக வாழ்வதற்குத் தேர்ந்த வழி என்றும் கொள்ளுதல் வேண்டும். உரிமை வாழ்வு என்பது தனிமைப்படுத்திக் கொள்ளும் சிறுமை வாழ்வாகக் கொள்ளாமல் அறப் பயிற்சிக் களமாகவும் பொருட்பயிற்சித் துறையாகவும், மனவளம் பெருக்கும் மனையகமாகவும் கொள்ளத்தக்கதாகும்.

இத்தகு புதுமனை புகுவிழா நடைமுறைகள் அனைத்தும் உற்றார் உறவு சுற்றம் உழைப்பாளர் என்பார்க்கு ஒருங்கே மகிழ்வூட்டும் விழாவாகத் திகழல் வேண்டும்.

புதுமனையின் பணிகள் முற்றாக நிறைவடைந்த நிலை யிலோ, சில பணிகள் மேலும் செய்யவிருக்கும் நிலையிலோ விழா நிகழ்த்தப் பெறுதல் உண்டு.

விழா நிகழ்த்தப் பெறும் மனையில் தக்க ஓர் அறையில் விழாவுக்கு வருவார் அமரவும் (அ) நின்று வழிபடவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து விடுதல் வேண்டும்.

இரண்டு குத்து விளக்குகள் திரியிட்டு எண்ணெய் விட்டு ஏற்றும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர் படம் மற்றும் குடும்பப் பெருமக்கள் முன்னோர் படம் இருப்பின் அவற்றையும் விளக்கின் பக்கம் வைத்தல் வேண்டும்.

பால்கலம் ஒன்றும் அதனை முகந்து எடுக்கும் வகையில் கைக்கரண்டி ஒன்றும். அப் பாலை முகந்தெடுத்து விடுதற்குத் தக்க பிறிதொரு கலமும் வைத்திருத்தல் வேண்டும்.

வழிபாடு செய்தற்குத் தக்க வகையில் பற்றி (பத்தி) பூ சந்தனம் வைத்திருத்தல் நன்று.

பழவகைகள், இனிப்பு முதலியவை வைத்தல் வழக்கு. தேங்காய் - அரிசி- உப்பு- மஞ்சள் இன்னனவும். கொடைக்குரிய உடை முதலியவையும் அங்கே வைத்திருத்தல் மரபு.

மனையின் சமையல் கட்டில் பால் காய்ச்சுவதற்குத் தக்க முன்னேற்பாடுகள் அனைத்தும் செய்திருத்தல் வேண்டும்.

இவ்வளவும் நிறைவேறிய பின்னர் வீட்டின் உள்ளிருப்பார் அனைவரும் வெளியே வந்து முகப்பு வாயிலுக்கு முன்னாக வோ, நிகழ்ச்சிக்குத் தனியே இடம் அமைக்கப்பட்டிருப்பின் அங்கேயோ இருத்தல் வேண்டும்.

குடும்பப் பெரியவர்களுக்குப் புத்துடை தருதல், மாலை சூட்டி வாழ்த்துப் பெறுதல் மனைக்குரியவரும் புத்துடையுடுத்து இருத்தல் என்பவை வழக்கம்.

புதுமனையின் தலைவாயில் நிலையின் இருபக்கங்களி லும் தொங்கல் நெடுமாலைகள் தொங்கவிட்டு அவ்விரண்டை யும் இணைத்து எளிதாக அவிழ்க்கும் வகையில் கட்டிவிட வேண்டும்.

புதுமனைத் திறப்பாளர் தலைவர் முதலியோர் அத் தலைவாயில் முன் நின்று,

"மங்கலம் மல்கு மனைவாழி அம்மனைக்கண்
தங்குக இன்பம் தழைத்து"

என மும்முறை கூறி, உடனிருப்பாரைக் கூறச் செய்து மாலை யின் இணைப்பைக் கழற்றி உள்ளே புகுதல் வேண்டும். இல்லத் துரிமையர் நிறைநீர்க் குடத்துடன் வரவும், பிறர்பிறர் உடன் வரவும் வேண்டும்.

விழா நிகழ்விடத்தில் உள்ள விளக்கில் குடும்பத்தவரின் பெற்றோர், வந்துள்ள பெரியோர் என்பாரும் ஒவ்வொரு திரியில் ஒளியேற்ற வேண்டும். இரண்டு விளக்கிலுள்ள திரிகளையும்

இவ்வாறே கணவன் மனைவியராகிய இணையரும் முதியரும் என ஏற்றி நிறைவில் குடும்பத்தலைவரும் தலைவியரும் இணைந்து ஏற்றுதல் வேண்டும். இவ் விளக்கேற்றி வழிபடுதல் இல்லுறை தெய்வவழிபாடு ஆகும்.

விழா நிகழ்த்துபவர்,

"ஒளியே போற்றி!
உயர்வே போற்றி!
களியே போற்றி!
கனிவே போற்றி!
அளியே போற்றி!
அறமே போற்றி!
தெளிவே போற்றி!
திறமே போற்றி!"

எனப் போற்றி உரைத்து மலர் தூவ வேண்டும். கடவுள் வாழ்த்துப் பாடலை இசையுடன் பாடுதல் இனிது.

வந்துள்ள பெருமக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கரண்டி பால் எடுத்து, அடுத்துள்ள பால் கலத்தில் விடுமாறு செய்தல் வேண்டும். அப்பணி முடிந்ததும் அப் பாலைக் காய்ச்சச் செய்தல் வேண்டும். அது நிகழும் போது குடும்ப நலம், குடும்பச் சீர்மை, மக்கட்பேற்றின் உயர்வு, மக்களை வளர்க்கும் வகை, கல்வியொடு பண்பாடு தரும் வகை, உழைப்பின் உயர்வு -காக்கும் வகை, பொருளியல் போற்றும் வகை என்பவற்றையெல் லாம் வந்திருப்போர் உணரும் வகையில் அங்கேயே இருந்தோ, வேறு அமைப்பு இருப்பின் அங்கேயோ நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். திருக்குறள் காட்டும் நெறியே தமிழர் நெறி என்பதை நிலைப்படுத்தும் வகையாலேயே திருவள்ளுவர் படம் - நூல்

வைக்கப்பட்டது என்பதையும் எடுத்துரைத்தல் வேண்டும். 'தம் இல் இருந்து' என்னும் குறள் விளக்கமும், இல்வாழ்க்கை வாழ்க்கைத் துணைநலம் மக்கட்பேறு என்னும் அதிகாரக் குறட் செய்திகளும் கூறுதல் தக்கது.

பால் காய்ச்சி வந்ததும் அனைவருக்கும் வழங்குதல் - இனிப்புத் தருதல் - விருந்தோம்பல் என்பவை மேலே தொடர லாம்.

விழாவுக்குத் தக, வரவேற்பு, தலைமையுரை, திறப்புரை, வாழ்த்துரை, நன்றியுரை என்பன இடம் பெறச் செய்யலாம்.

நிறைவில் மனை எழுப்பிய தொழிலர்க்கு உரிய பாராட்டு பரிசு ஆகியவும் இடம் பெறச் செய்தல் கடன்.

சந்தனக்கிண்ணத்தில் உள்ள கலவையை மாவிலையால் தொட்டு இல்லப்பகுதிகள் அனைத்திலும் தெளிக்கலாம்.

மாடு என்பது பக்கம். வீட்டையடுத்தே மாடு கட்டும் வழக்கம் உண்டு.அம் மாடுகளே செல்வம் ஆதலால், மாடு என்பதற்குச் **செல்வம்** என்றும் பொருளும் உண்டு. செல்வம் '**திரு**' ஆதலால் ஆவைத் திருமகளாகவே நம்மவர் போற்றினர். ஆவைத் தாய் என்பதும் வழக்கே. ஆவை வழிபடும் வழக் கத்தால் அதனைக் கட்டும் இடத்தைத் '**தொழு**' என்றும '**தொழுவம்**' என்றும் கூறினர்.

ஆதலால், புதுமனை விழாவின்போது ஆவை முற்றத் திற்குக் கொண்டுவந்து புல்லும் பழமும் கரும்பும் தருதலும் மாலை சூட்டலும் வழக்கம். அதன்பால் பொங்குதல், குடிநலம் பொங்கும் குறிக்கோளாயிற்று அன்றியும் பசு (அ) ஆன் ஓம்புதல் உலக உயிர்களை ஓம்பும் மெய்யியல் கொள்கையும் ஆயிற்று. ஆகவே வாய்ப்புள்ள இடங்களில் ஆதந்து ஓம்பல் நிகழ்த்தல் சிறப்பாம்.

9. தமிழ்நெறியில் மணிவிழா முதலியன

25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா

50 ஆம் ஆண்டு பொன்விழா

60 ஆம் ஆண்டு மணிவிழா

70 ஆம் ஆண்டு முத்துவிழா

75 ஆம் ஆண்டு பவழவிழா

80 ஆம் ஆண்டு வயிரவிழா

100 ஆம் ஆண்டு நூற்றாண்டுவிழா

ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் அல்லது ஓரமைப்பு இவற்றுக்கு ஆகிய ஆண்டு அளவினைப் பொறுத்து இவ் விழாக்கள் நிகழ்கின்றன. 25, 50ஆம் ஆண்டு விழாக்களினும் 60ஆம் ஆண்டாகிய மணிவிழா பெருக நிகழ்வது. முத்துவிழா, வயிரவிழா என்பவை அண்மையில் நிகழத் தொடங்கியவை. 80ஆம் ஆண்டாகிய வயிரவிழா 'ஆயிரம் பிறை காண்' விழாவாகவும் சொல்லப்படும். நூற்றாண்டு விழா அரிதாகச் சில நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் நிகழ்த்தப்படுவன ஆகும். மக்களுக்கு நிகழ்தல் அரிதில் அரிது.

இவ்விழாக்கள் பெரும்பாலும் ஒப்பான வகையில் நிகழ்வனவே. மிகப் பெரும்பாலாக நிகழும் மணிவிழாவைப் பற்றிப் பார்த்தால் மற்றவற்றையும் அறிந்து கொண்டதாம்.

ஒரு குடும்பத் தலைவர்க்கு அறுபதாம் அகவை ஆகும் பொழுதில் மணிவிழா எடுத்தல் நடையில் உள்ளது. அவர்தம் அகவை அறுபது என்பதையன்றி. அவர் தம் துணைவியார்

வயதைத் தனியே கண்டு விழா எடுப்பதில்லை. வாழ்க்கைத் துணை என்னும் வகையால் இருவருக்கும் விழா எடுத்தலே மரபு.

59ஆம் ஆண்டின் நிறைவுக்கு அடுத்த நாளே 60ஆம் ஆண்டின் தொடக்க நாள் ஆதலால் அன்று முதல் அவ்வாண்டு நிறைவுக்குள் மணி விழா எடுக்கப்படும். இட கால சூழ்நிலை களுக்குத்தக அடுத்த ஆண்டு கூட நிகழ்த்தப் பெறுதல் வழக்கம்.

தமிழ்மரபு போற்றாதவர் இதனை 'அறுபதாம் கலியாணம்' எனக் கொண்டு மங்கல நாண் முதலியன புதுப்பித்து மீண்டு மொரு கலியாணச் சடங்காகவே நடத்துகின்றனர். இது, ஆற்றில் குளிப்பதை விட்டுச் சேற்றில் குளிப்பது போன்றது.

மணி என்பது மண்ணுதல் - நீராட்டுதல்- உடையது. மணியைப் பட்டை தீட்டிக் கழுவுதல் போல, ஒருவரை மாசற்ற மணியாகக் கருதி எடுக்கப்படும் உயரிய விழா இது.

நம்முந்தை முதல்வர் தொல்காப்பியர் காட்டிய வாழ்வியல் இலக்கணத்தையும், திருவள்ளுவர் அருளிய தமிழ்நெறித் துறவு வாழ்வையும் அறிவார் இதன் அருமை உணர்வார்.

இல்வாழ்வில் அடைய வேண்டிய பேறுகளையெல்லாம் அடைந்து நிறைவேறிய பின்னர்ப் பாதுகாப்பாக அமைந்த மக்களுக்கும் சுற்றத்தவர்க்கும் தாம் கொண்ட வாழ்வுப் பயனாம் அறிவு அற ஒழுக்கங்களைக் கற்பித்து வழிகாட்டுவதே கடமை யாகும் என்கிறார் தொல்காப்பியர். அவர் கூறும் நூற்பா:

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே **(1138)**

என்பது. கிழவன் கிழத்தி என்பார் தலைவன் தலைவியராகிய கணவன் மனைவியர். நிலக்கிழமை, குடும்பக் கிழமை, ஆளும் கிழமை மேற்கொண்டிருந்த இணையராகிய அவர்கள் கிழவன்

கிழத்தியர் என உரிமைப் பெயர் பெற்றவர். அக்கிழமையாம் உரிமையைத் தம் மக்களும் சுற்றமும் அடைய வழிகாட்டியும் கற்பித்தும் பற்றற்ற துறவுநிலை மேற்கொள்வர் என்பதாம்.

வாழும் நாளெல்லாம் உரிமையே உடைமையே பதவியே என இராராய், மணிவிழாக் காணும் காலத்தில் குடும்பப் பொறுப்பு களையெல்லாம் விடுத்துப் பொதுப் பொறுப்புகளை ஏற்றுச் சிறப்புறுவர் என்பதாம்.

இதனாலேயே திருவள்ளுவர் அறத்துப்பால் என்னும் ஒரே பாலிலேயே முற்பட இல்லறவியலும், அதன் நிறைவாகத் துறவற இயலும் வைத்தார். அன்பில் தொடங்கும் இல்லறம் அருளில் திகழத் துறவு நிலையை வைத்தார். இது ஒரு மனை யின் மேல் எழுப்பப்பட்ட மாடம் போன்றதும், பெற்றதோர் ஆய்வுப் பட்டத்தின் மேல் மற்றோர் ஆய்வு மேற்பட்டம் பெற்றதும் போன்றதாம்.

நிலையாமை உணர்ந்து, துறவு போற்றி, மெய்யுணர்ந்து, அவா வறுத்துப் பேறாப் பெருநிலையாம் செம்பொருள் எனப் படும் சிறப்பு அடைதல் பிறவி நோக்கு என்றார் திருவள்ளுவர். இப்பிறவி நோக்கை வாழ்வில் அனைவரும் உணரச் செய்யும் விழாவே மணிவிழாவாம்.

மணிவிழாக் கொள்வார்க்கு அவர்தம் மக்கள், பேரர்கள் உற்றார் உறவினர் உழுவலன்பர் நண்பர் ஆயோர் எடுப்பதே இவ்விழாவாம்.

நன்னீராடல்; புத்துடை உடுத்தல்; அமைந்த சிந்தையொடு இறை வழிபாடு புரிதல்; மனஒருமைப் படுத்தும் இறைமைப் பாடல்கள் ஓதுதல், ஓதுவித்தல், தேடிய தேட்டுகளில் தக்க அளவு அறச்செயல், அருட்பணிகளுக்கு உதவுதல், மரம் நடுதல், விருந்தோம்பல், மலர்வெளியிடுதல் இன்னவை நிகழ எளிமை பொலிவு அமைதி இறைமை இனிமை என்பவை திகழ

எடுக்கப்படும் விழா இஃதாகும். தொடர்புடையார் அனைவரும் மகிழுமாறு நிகழ்த்தப்பெறும்.

60 வயதுக்கு மேற்பட்ட பெருமக்களை வணங்கி, அவர் களிடம் வாழ்த்துப் பெறுதலும், 60 வயதுக்குக் குறைந்தவர்கள் தம்மை வணங்கிப் பரிசுகள் வழங்க அவர்களை வாழ்த்திக் கொடை வழங்குதலும் வழக்கம்.

மணிவிழாக் காணும் பெருமக்களை முன்வைத்து, இசை யரங்கு, பாட்டரங்கு, பாராட்டரங்கு, வாழ்த்தரங்கு என்பவை நிகழ்த்துதலும் காணக் கூடியவையே.

ஒருவேளை, ஒருநாள் என இல்லாமல் பலவேளை, பலநாள் விழாக்களும், பல இடங்களில் பல அமைப்புகளில் நிகழும் விழாக்களும் விழாக் கொள்வார் சிறப்பு - பொதுப்பணி- என்பவை கொண்டு நிகழும் இவையெல்லாம் நாட்டு நடைமுறை யில் காண்பவை.

மணிவிழா என்பது முதுவர் விழா, துறவர் விழா, பொது நலப் புரிவு விழா, என்றெல்லாம் பாராட்டக்கூடிய விழா.

இனி முத்து, பவழம், வயிரம் என்பனவோ ஒன்றில் ஒன்று உயர்ந்த பெருமூதாளர் விழாவாகும்.

முதியவர் என்பார் குடும்பப் பாதுகாவலர் என்பதை உணர்ந்து வாழ்ந்து வழிகாட்டியிருப்பின் இப்பேறுகள் எல்லாம் வாய்க்கப் பெறுவர் என்பது உறுதியாம்.

மணிவிழா முதலியவை மணவாத்துறவர்க்கும், மணந்து தபுதாரம் (மனைவியில்லார்) ஆனவர்க்கும் நிகழ்த்தப் பெறுதலும் உண்டு. ஆனால், கணவனை இழந்த மகளிர்க்கும் மணவாமை மேற்கொண்டு இல்லில் வாழும் மகளிர்க்கும் மணிவிழா நடாத்தப் பெறுதல் காணப்படவில்லை தமிழ்மண் அதனை எண்ணி நடாத்துதல் வரவேற்கத் தக்கதாம்.

10. தமிழ்நெறியில் நினைவுக் கரணம்

(அ) படத் திறப்பு

பிறப்பு உண்டானால் இறப்பும் உண்டு என்பது உறுதி.

பிறப்பு - விழாவாகக் கொண்டாடப்படுதலும்,

இறப்பு - நினைவுநாளாக எண்ணப்படுதலும் உலகளாவிய வழக்கம்.

இறப்பு என்பதற்கு இறந்து போதல் என்னும் பொருள் மட்டும் இல்லை; கடந்து போதல், சிறப்புறுதல் என்னும் பொருள்களும் உண்டு.

மாண்டார் என்னும் சொல்லுக்கும் பெருமையுற்றார் என்னும் பொருளும் இறந்தார் என்னும் பொருளும் இருத்தல் பலரும் அறிந்ததே.

இவற்றின் குறிப்பு என்ன?

பெருமையுடன் இறக்கும் இறப்பே வேண்டத்தக்கது; உலகில் நிற்கும் காலத்தில் ஒளியுடனும், உலகில் இருந்து மறையும் காலத்துப் புகழுடனும் விளங்கும் பிறப்பே மதிப்புடையது என்பதாம்.

நிலையில்லாத உலகம் இது; நிலையில்லாத உடலும் இது. இவ் வுலகில் வாழ்வோர் இவற்றை உணர்ந்து நிலைபெறத் தக்கவற்றை வாழும் போதே நாளை எனத் தள்ளாமல் உடனே செய்துவிட வேண்டும் என்பது நம் முன்னவர் ஆணை.

“நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை”

என்பது திருக்குறள்.

“நில்லா உலகம் புல்லிய (பொருந்திய) நெறித்தே” என்பது தொல்காப்பியம்.

ஒருவர் வாழ்வில் பிறப்புக்கு எத்தகு முதன்மை உண்டோ, அத்தகு முதன்மை இறப்புக்கும் உண்டு. சிலர் பிறப்பினும் இறப்பு, உலகம் போற்றும் வகையில் அமைந்து விடுவது உண்டு. நேரில் இருந்த நாளினும் நெஞ்சில் இருக்கும் நாளில் அவர்கள் கோடிக்கணக்கானவர்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்புவது உண்டு. அவர்கள் ‘வித்தகர்’ என்றும் ‘சாவாவாழ்வினர்’ என்றும் போற்றப்படுவர்.

இறப்பு இயற்கையானது என்பதை “உறங்குவது போலும் சாக்காடு” என்று திருவள்ளுவர் மொழிந்தார். துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் என்றும் கூறினார்.

இறந்தார் உடலைப் புதைத்தல் எரித்தல் என இருவகை யாலும் சடங்கு செய்யும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. இடுகாடு சுடுகாடு எனத் தனித்தனி இடங்களும் உண்டு.

இவ்விறப்பு வகைப், புதைப்பு எரிப்பு என்பவையும் அவற்றுக்குரிய சடங்குகளும் அயல்நெறிப் பட்டில. ஆனால் இறுதிச் சடங்கு மட்டும் (கருமாந்திரம்) அயலார் வழிப்பட்டும் ‘அரிசி கொடுத்தல்’ எனப் பெயர் பெற்றும், தீட்டுக் கழிப்பதாகக் கூறப்படும் அயன்மொழி வழக்குக்கொண்டு விட்டது. அவ் வழக்கும் சிலகுடிவழிகளில் புகவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இல்லுறை தெய்வமாக வழிபடப்படுவார் மறைவைத் தீட்டெனப் பெயர் சூட்டி அதனைத் தீர்க்கும் கடன்புரிதல் பழிச் செயல் அல்லவா! வைகுண்ட பதவி சிவலோக பதவி என்று பெயரிட்டு அது தீட்டு என்பது பேரிழிவல்லவா.

இதனை இறுதிக்கடன், நீத்தார் நினைவு, இரங்கல் கூட்டம், நினைவு நாள், படத்திறப்பு என்னும் பெயர்களால் இறந்தாரைப் போற்றி வழிபடுதலை, நாம் அறிந்து, அவ்வழியை ஏற்று நடத்துதல் வேண்டும்.

அமரில் இறந்தவன் 'அமரன்' எனத் தெய்வநிலைய னாகக் கொள்ளப் பட்டான். அவனுடைய பெயரும் பெருமையும் விளங்கக் கல்லெடுத்து அவன் உருச்செய்தும் எழுத்துப் பொறித்தும் படையலிட்டும் வழிபடப்பட்டான். இவ்வழக்கம் தொல்காப்பியர் நாளுக்கு முன்னரே தோன்றிய வழக்கம். இன்றும் வழக்கில் 'கல்லெடுப்பு' எனும் சடங்கு மறையாமல் உள்ளது.

பெண்டிருக்கும் தெய்வநிலைப் பேறு உண்டு என்பதற்குக் கண்ணகி வரலாறும், தீப்பாய்ந்த அம்மன் எனக்கூறப்படும் தெய்வழிபாட்டிடங்களும் சான்று.

இவற்றின் மீட்டெடுப்பாக இறந்த பெருமக்களின் படத்திறப்பு நிகழ்ச்சி அவர்கள் நினைவு போற்றும் வகையில் நிகழ்த்தப்படுகின்றன.

உற்றார் உறவினர் தொடர்பாளர் அனைவரும் ஒருங்கு கூடும் வாய்ப்பான ஒரு நாளையும் நேரத்தையும் தேர்ந்து அறிவிப்புச் செய்தும் அழைப்பு விடுத்தும் நிகழ்த்தப்பெறும் நினைவுக் கூட்டம் இது. வெறும் நினைவும் கவலையும் ஆகாமல், பண்பு நலம் பாராட்டல், பணிநலம் பாராட்டல், எடுத்துக் காட்டாக வாழ்ந்த வாழ்வு இன்னவற்றை யெல்லாம் எண்ணவும், அவர் பெயரால் அறப்பணி, பொதுப்பணி புரிந்து அவர் வாழ்வை நிலைப்படுத்தவும் கால்கோள் செய்யும் உள்ளுகை யொடு கூடிய நினைவு நிகழ்ச்சியே அதுவாகும். ஆதலால், நலம் பாராட்டல் நன்றி பாராட்டல் அது எனினும் தகும்.

இறந்தவரை எவரும் அறிந்து கொள்ளும் வகையில் அமைந்ததாக அவர் படம் ஒன்றை இயன்ற அளவால்

பெரிதாக்கிச் சட்டமிட்டு வைத்துக் கொண்டு அப்படத்திறப்பு நிகழ்த்துதல் வேண்டும்.

கூட்டம் கூட்டியவர் அல்லது இல்லத்தார் சார்பில் அழைப்பிதழ்கள் விடுத்தல் வேண்டும்.

தலைவர், படத்திறப்பாளர், இயல்நலம் பாராட்டுவோர் எனப் பலரும் தத்தம் மனவுணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைக்க வேண்டும்.

இறந்தவர் நினைவைப் போற்றும் வகையில் இன்ன இன்ன செயல்களை மேற்கொள்வதென அங்கேயே திட்டப் படுத்த வேண்டும்.

நண்பர்கள் அன்பர்கள் ஆர்வலர்கள் ஆயோர் தம் பங்களிப்பாகச் செய்யப்படுவனவும் கருதுதல் வேண்டும்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதலும் ஆருயிர் அமைதிக்கு இறையருள் வேண்டலும் தக்கவகையால் செய்யப்பட வேண்டும்.

வரவேற்புரை, நன்றியுரை என்பவை இடம் பெறல் ஆகா. பொன்னாடை போர்த்துதல், நகையாடல் தவிர்க்கத்தக்கன. கைதட்டுதல் விலக்கல் கடன்.

எளிய அளவில் சிற்றுண்டியோ, உண்டியோ வழங்கலாம் வாய்த்தால் படத்திறப்பின் போதே, நினைவு நூல் வெளியிடல் நலமாம்.

பங்குகொள்வாருள் பெரும்பாலாரும் உறவும் அன்பும் நண்பும் ஆகிய தொடர்பினராகவே இருத்தல் வேண்டத்தக்கது. பிரிந்தாரையும் ஒதுங்கினாரையும் ஒன்றிணைத்து ஒருமைப்படுத் தும் நிகழ்வாக இஃது அமையப் பார்த்துக் கொள்ளல் ஏற்பாடு செய்வார், முன்னிற்பார் கடனாம்.

இனி எளிமையாக நினைவுவிழா நிகழ்த்துவதும் உண்டு. இல்லுறை தெய்வமாகக் கருதப்படும் விளக்கேற்றி வைத்து வீட்டளவில் மலர் தூவி வழிபடல் அது. மேலும். உரிய படையல்கள் மணப்பொருள் சூடம் கொளுத்தல் என்பவற்றை மேற்கொள்வதும் இறைவணக்கப்பாடல் திருக்குறள் முற்றோதல் போற்றியுரைத்தல் என்பனவும் நெருங்கிய உறவினரை மட்டும் அழைத்துச் செய்தலும் சற்றே விரிவு உடையது. எவ்வகையாகச் செய்யப்படினும் நினைவும் வழிபாடுமே குறிப்பாகும்.

மேலே, திருக்கோயில் செலவு, தீர்த்தச் செலவு செய்வதும் வழக்கமே.

நீத்தார் என்பது பழநாளில் பற்றற்ற துறவரைக் குறித்தது. திருக்குறளில் 'நீத்தார் பெருமை' என்பதைக் காண்க.

> ***"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)***
> ***இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"***

என்பதால் நீத்தார் என்பார் துறந்தார் என்றும், அவர் இறந்தார் அல்லர் என்பதும் புலப்படும். ஆதலால் நீத்தார் கடன், நீத்தார் நினைவு என்பவற்றை விலக்கிவிடுதல் நன்றாம்.

> ***"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து***
> ***வேண்டும் பனுவல் துணிவு"***

என்பதும் வள்ளுவமே. பற்றற வாழும் வேண்டுதலே 'நீத்தல் விண்ணப்பம்' என்பதனை அறிவார், உண்மை உணர்வார்.

11. திருக்குறள் போற்றி

திருவள்ளுவர் கண்ட முழுமுதல் இறைமை வழிபாடு

உள்ளொளி மிக்க உயர்ந்தகுருவர் வழிபாடு, உலக நலங் காக்கும் பண்பு நல வழிபாடு என்பவற்றை அவர்தம் வாக்கும் நோக்கும் கொண்டு ஆக்கப்பட்டது இப்போற்றித் தொகுப்பாகும். தனிப்பேரிறைமை, தவப் பெருங்குருவர், தண்ணளிப் பண்பாடு என்பவற்றைத் தாய்மொழி வழியாக நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து உருகி உருகிப் போற்றுவதே உலகொத்த ஒரு நெறியாகும். அந்நெறியை நெஞ்சார உணர்ந்து நேயத்தால் போற்றி உயிர் தளிர்க்கச் செய்யுமாறே இப்போற்றி ஆக்கப் பெற்றதாகும்.

திருவள்ளுவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலை எய்தித் ‘தெய்வப் புலவர்’ என்றே வழிபடப்பட்டவர். அவர் அருளிய திருக்குறளைப் போற்றிக் கொள்ளாமல், அவர்நூல் வெளிப்படட காலத்திற்குப் பின்னர் வெளிப்பட்ட நூல் எதுவும் இல்லை என்பதொன்றே அவர்தம் பொதுமைச் சிறப்பையும் புலமை நலத்தையும் உலகறியச் செய்யும்.

திருவள்ளுவர், புகழ்பாடும் திருவள்ளுவ மாலை போல எவ்வொரு நூலும் தனியே ஒரு புகழ் நூலைப் பெற்றதில்லை. திருக்குறளைத் தன் ஒரு பகுதியாகக் கொண்டு எழுந்த நூல் களும், எழுந்துவரும் நூல்களும், எண்ணில. இவையெல்லாம் திருக்குறளை நம்மவர் தலைமேற்கொண்ட சிறப்பின் சான்று களாகும்.

திருக்குறளை ஓதினால் உயர்வு கிட்டும்.

திருக்குறளை ஓதினால் பண்பாடு தானே வரும்.

திருக்குறளை ஓதினால் மனமாசு ஒழியும்

திருக்குறளை ஓதினால் நோய்நொடி நீங்கும்

திருக்குறளை ஓதினால் உயிர் தளிர்த்து நீடு வாழலாம்.

திருக்குறளை ஓதினால் தெய்வநிலை எய்தலாம்.

ஆதலால் திருக்குறளை ஓதிச் சீரும் சிறப்பும் பேறும் பெருமையும் வாழ்வும் வளமும் பெற்றுச் சிறப்பெனும் செம்பொருள் கண்டு பேராப் பெருநிலை எய்தலாம். இதனை எண்ணிப் பயன்பெற்றுவரும் பட்டறிவால் படைக்கப் பெற்றதே இப் போற்றி. ஆதலால், இதனை ஓதியும் உணர்ந்தும் வழிபட்டும் ஒளிமிக்க வாழ்வை ஒவ்வொருவரும் அடைவாராக.

போற்றி! போற்றி!

	குறள் எண்
அகர முதலாம் ஆதியே போற்றி	1
மலர்மிசை ஏகும் மாணடி போற்றி	3
தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி	7
எண்குணத் திலங்கும் இறையே போற்றி	9
அமிழ்த மழையாம் அருளே போற்றி	11
ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி	24
நிறைமொழி அருளும் நிறைவே போற்றி	28
குணமெனும் குன்றே குறியே போற்றி	29
மனத்தில் மாசிலா மணியே போற்றி	34
வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி	50
மங்கல மனையற மாட்சியே போற்றி	60

அறிவறி பண்புப் பேறே போற்றி 61
அன்போ டியைந்த வழக்கே போற்றி 73
வருவிருந் தோம்பும் வளமே போற்றி 83
இன்சொல் வழங்கும் இயல்பே போற்றி 99
செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி 101
காலத் துதவும் கனிவே போற்றி 102
நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி 118
நிலையில் திரியா மலையே போற்றி 124
ஒழுக்கம் குறையா உரமே போற்றி 139
பொறுக்கும் அழியாப் புகழே போற்றி 156
அழுக்கா றில்லா அறனே போற்றி 163
அறனறிந்து வெஃகா அறிவே போற்றி 179
புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி 183
பயனில பகராப் பண்பே போற்றி 197
பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி 204
ஒத்த தறியும் உயர்வே போற்றி 214
ஊருணி நீராம் உடைமையே போற்றி 215
பயன்மரம் ஆகும் பரிவே போற்றி 216
மருந்து நலமாம் மாண்பே போற்றி 217
வறியார்க் குதவும் வாழ்வே போற்றி 221
பசித்துயர் மாற்றும் பரமே போற்றி 225
வசையிலாப் புகழே வானே போற்றி 240
தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி 244
அல்லல் அறியா அருளே போற்றி 245
உயிரழித் துண்ணா ஒளியே போற்றி 259

தன்னுயிர் தானறு தவமே போற்றி 268
கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி 269
அளவறி நெஞ்சத் தறமே போற்றி 288
உள்ளம் பொய்யா ஒழுக்கமே போற்றி 294
வெகுளியை மறக்கும் விரிவே போற்றி 303
இன்னாமை எண்ணா இனிமையே போற்றி 316
பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி 322
நிலைபே றுணரும் நிலையே போற்றி 331
பற்றது பற்றாப் பற்றே போற்றி 348
மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி 351
ஐயம் அணுகாத் தெளிவே போற்றி 354
சிறப்பெனும் செம்பொருட் செறிவே போற்றி 358
பேரா இயற்கைப் பெற்றியே போற்றி 370
அசையா உறுதி ஆக்கமே போற்றி 371
முறைசெய் தருளும் இறையே போற்றி 388
உலகம் இன்புற இன்புறல் போற்றி 399
நுண்மாண் நுழைபுல நோன்பே போற்றி 407
ஆவ தறியும் அறிவே போற்றி 427
எதிரதாக் காக்கும் இயல்பே போற்றி 429
வருமுன் காக்கும் வாழ்வே போற்றி 435
அறனறி மூத்த அறிவே போற்றி 441
பெரியரிற் பெரிய பேறே போற்றி 444
மன்னுயிர்க் காக்க மனநலம் போற்றி 457
தக்கதே செய்யும் தகைமையே போற்றி 466

அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி 474
செய்தற் கரிய செய்கையே போற்றி 489
அஞ்சாத் துணிவே துணையே போற்றி 497
திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி 501
வாரி பெருக்கும் வகையே போற்றி 512
அளவ ளாவும் அமிழ்தே போற்றி 523
சுற்றம் சுற்றும் சுடரே போற்றி 524
புகழ்ந்தவே புரியும் புகழே போற்றி 538
கோலது கோடாக் கொற்றமே போற்றி 546
குடிபுறங் காங்கும் குணமே போற்றி 549
ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி 561
கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி 571
உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி 592
நீரள வுயரும் மலருளம் போற்றி 595
குடியெனும் குன்றா விளக்கே போற்றி 601
அறிவறிந் தாற்றும் ஆள்வினை போற்றி 618
அடுக்கும் இடுக்கணை அழிப்பாய் போற்றி 625
இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி 629
மதிநுட்பம் நூலோ டுடையாய் போற்றி 636
உலகத் தியற்கை உணர்வோய் போற்றி 637
நிரந்தினிது சொல்லும் நீர்மையே போற்றி 648
வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி 651
நடுக்கறு காட்சி நயனே போற்றி 654
சொல்லிய செய்யும் சுடரே போற்றி 664
வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி 665

நூலாருள் நூல்வல்ல நுண்மையே போற்றி 683
தூய்மை துணைமை துணிவே போற்றி 686
போற்றற கரியவை போற்றியே போற்றி 693
குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி 703
ஒளியார் முன்னுறும் ஒளியே போற்றி 714
கற்றவை செலச்சொல் கலையே போற்றி 722
நாடா வளத்ததாம் நாடே போற்றி 739
அன்பீன் குழவியாம் அருளே போற்றி 757
அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி 757
நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி 782
உள்ளம் பெருகுவ உள்ளுகை போற்றி 798
கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி 808
இகலெனும் எவ்வம் இல்லாய் போற்றி 853
பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி 874
அளவறிந் துண்ணும் அறிவே போற்றி 934
செப்பமும் நாணும் சேர்வே போற்றி 951
பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி 963
உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி 971
கொல்லா நலத்ததாம் நோன்மையே போற்றி 994
நயனொடு நலம்புரி பயனே போற்றி 994
சீருடைச் செல்வ மாரியே போற்றி 1010
கருமத்தால் நாணும் நாணே போற்றி 1011
உழுதுண்டு வாழும் வாழ்வே போற்றி 1033

- அகர முதலாம் ஆதியே போற்றி போற்றி 1

12. நல்வாழ்வுக் குறிப்புகள்

(பெருமக்கள் பேருரைத் தொகுப்பு)

- மனத்தில் உறுதி வேண்டும் வாக்கில் இனிமை வேண்டும் நினைவில் நல்லது வேண்டும்.

- நல்லதையே நினைக்க
  நல்லதையே பார்க்க
  நல்லதையே கேட்க
  நல்லதையே பேசுக
  நல்லதையே படிக்க
  நல்லதையே எழுதுக
  நல்லதையே கடைப்பிடிக்க

- முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம் நாளைய உறுதி நிலை.

- சிரிக்க – அது, நெஞ்சின் இசை
  சிந்திக்க – அது, ஆற்றல் வளம்
  படிக்க – அது, அறிவின் ஊற்று
  உழைக்க – அது, வெற்றி வாய்ப்பு
  விளையாடுக – அது, இளமைக் கொடை
  நட்பாடுக – அது, மகிழ் நலப்பெருக்கு

- பகையை அழிவால் தீர்த்தல் மீள் பகையே. பகையை அறிவால் தீர்த்தல் நட்பாகும்.

- நன்றாகப் பேசுதல் நலமே. அதனினும் நலம் நன்றாகச் செய்தல்.

- இன்று உன்னால் இயன்றவரை நன்றாகச் செய் நாளை அச் செயலே உன்னை மிக நன்றாகச் செய்யுமாறு செய்துவிடும்.

- உள்ளத்தின் உட்சுரப்பே கவலையும் களிப்பும்; அவை வெளியே இருந்து வருவன அல்ல.

- உன் பண்பைச் சொல்ல வேண்டுமா? உன் நண்பைச் சொல்! சொல்லி விடுகிறேன் என்பர். நீ கற்கும் நூலைச் சொல்; உன் பண்பைச் சொல்லி விடுகிறேன் என்பது அதனினும் மிகத் தகும்;
- நூலகம் என்பது இளைஞர்க்குப் பாலகம்! முதியர்க்கோ மேலகம்! ஆர்வமிக்க ஆய்ஞர்க்கோ காலகம் (தென்றல் காற்று உலவுமிடம்)
- 'உலகம்' ஒரு பொத்தகம்; அதனைப் படியாதவன் எவ்வளவு படித்தவன் ஆயினும் படியாதவனே. அறிதோறும் அறியாமை காண்பவன் எவன்? அவன் அறிஞன்!
- இரண்டு விழிகள் இரண்டு விழிகளோடு மயங்கிக் கிடப்ப தன்று திருமணப்பயன்! தோளோடு தோளாகி நான்கு விழிகள் ஒரே திக்கில் ஊன்றி நின்று உழைக்கும் உவப்பில் திளைப்பதே!
- பகுத்துக் கொள்ளப்படும் துன்பம் பாதியாகக் குறைந்து விடும், ஆனால் பகுத்துக் கொள்ளப்படும் இன்பமோ இரட்டைப் பங்காகப் பெருக்கெடுக்கும்.
- மிகுந்த உயரம் தாண்ட வேண்டுமா? மிகுந்த நீளம் ஓடிவர வேண்டும்!
- வாழ்வை விரும்புகிறீர்களா? பொழுதை வீணாக்காதீர்கள். ஏனெனில் பொழுதால் ஆனதே வாழ்வு!
- போனால் வராதது ஒன்றே ஒன்று. அது பொழுதே!
- சுடர் விட வேண்டுமா? சூடுபட வேண்டும்! வலிமை வர வேண்டுமே? வலி வரவேண்டும்! சுடுதல் இன்றிச் சுடர் விட்டவர் எவர்? வலி இன்றி வலிமை பெற்றவர் எவர்? உலக வரலாறு சொல்லும் உயர் வரலாறு இது!
- நல்லவற்றைக் கூட்டுக அல்லவற்றைக் கழிக்க அன்பைப் பெருக்குக வாழ்வைத் திட்டமிட்டு வகுக்க.
- வாழ்வு தந்த பாடம் ஒன்று. இடுப்புக்கு உடை; மேலுக்குச் சட்டை; என்பவற்றைப் போல், முகத்துக்குப் புன்னகை
- பிறரைப் பாராட்டுங்கள்; பாராட்டுக் கிடைக்கும். பிறரை மதியுங்கள்; மதிப்புக் கிட்டும். அன்பு செலுத்துங்கள்; அன்பு தேடி வரும். இவை ஒற்றை வழிப்பாதைகள் அல்ல! இரட்டை வழிப் பாதைகள்!

- உன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தா தெரிய வேண்டும்? இல்லை; உன் முன்னால் நிற்பவர் முகத்தைப் பார்க்கவே உன் முகம் தெரிந்துவிடும். முகத்துக்கு முகம் கண்ணாடி!
- மலச்சிக்கல் போன்றது பொய். மலச்சிக்கல் நோய்களுக்கு எல்லாம் தாய். பொய் தீமைகளுக்கெல்லாம் தாய்.
- கண்ணாரக் கண்டதும் பொய். காதரக் கேட்டதும் பொய். தீர ஆய்ந்து முடிவெடுப்பதே மெய்.
- சிறுசிறு செயல்களிலே அமைதி தேடுகிறாயா? பெரிய செயலைச் செய்ய மாட்டாய்.
- விழாமை யன்று பெருமை; மீண்டும் விழாமல் எழுந்து நிற்பதே பெருமை.
- நினைத்ததை எல்லாம் பேசாதே! நினைத்துப் பேசு.
- முதுமையும் இளமையும் அகவையைப் பொறுத்தவை அல்ல. உள்ளத்தைப் பொறுத்தவை அவை.
- நடந்தால் நாடெல்லாம் உறவு. படுத்தால் பாயும் பகை.
- கொள்கை இல்லாத அரசியல்
  உழைப்பு இல்லாத வருவாய்
  நேர்மை இல்லாத வாணிகம்
  ஒழுக்கம் இல்லாத கல்வி
  மனச்சான்று இல்லாத மகிழ்ச்சி
  மாந்தநேயம் இல்லாத அறிவியல்
  ஈகம் இல்லாத இறைவழிபாடு
  இவை ஏழும் விலக்கப்பட வேண்டியவை.

13. நலவாழ்வுக் குறிப்புகள்

(பல்வேறு நூல் தொகுப்பு)

- உணவின் மெய்யான சுவை உணவில் இல்லை; அதன் சேர்மானப் பொருளிலும் இல்லை; பசியிலேயே உணவின் சுவை உள்ளது.
- உண்பது இன்பம் எனப் பலரும் நினைத்திருக்கத் திருவள்ளுவர், 'உண்டது அறல் இன்பம்' என்றார்.
- உண்ணா நோன்பின் வகை மூன்று.

  1. நீரும் அருந்தாமை

  2. நீர் மட்டும் அருந்துதல்

  3. பழச்சாறு, மோர் தேன் முதலிய நீர்மம் அருந்துதல். மூன்றாம் முறை இயல்பானது; இயலுவதானதுமாகும்.
- உண்ணா நோன்பு கொள்வதற்குக் குடும்பச் சூழலை விடுத்துத் தனித்த இயற்கைச் சூழல் ஒன்றில் இருத்தல் இடரற்றதும் வெற்றி தருவதும் ஆகும்.
- உணவு இல்லாமையால் உலகில் இறக்கின்றவர்களின் எண்ணிக்கையிலும், உணவு ஒவ்வாமையால் இறக்கின்றவர் எண்ணிக்கையே பன்மடங்காகும் என்கிறது மருத்துவ ஆய்வு உலகம்
- சில வேளைகளோ சில நாள்களோ உண்ணாமல் இருப்பதும், இந்த உணவு இவ்வளவே தேவை என்று தானே கட்டுப் படுத்திக் கொண்டு வாழ்வதும் நோன்பு ஆகும். 'நோல்' என்பது வலிமை. அதுவே நோன்பு என்றாகி வலிமை, பெருமை, தவம் என்னும் பொருள்களைத் தருகின்றது.
- தலைவலி, காய்ச்சல், தடுமம், இருமல், நீரிழிவு, மாரடைப்பு என்று நம்மால் சொல்லப்படுவன நோய்கள் அல்ல. அவை நோய்க் குறிகளே. உடலில் ஏற்பட்டுள்ள தீய மாற்றங்களைக் காட்டுவனவே

அவை. அத்தீயவற்றை மாற்றித் தூயது ஆக்குவதே மருத்துவம் ஆகும்.

- நாவுக்குச் சுவையானவை என நாம் எண்ணி உண்பவை எல்லாம் உடல் ஊட்டம் தருவனவா?
- வயிறு முட்ட முட்ட உண்பன வெல்லாம் உடலுக்கு ஊட்டம் தருவனவா?
- ஊட்டமிக்கவை என நாம் விழுங்கும் வில்லைகள், குடிமங்கள், முகிழுங்கள் எல்லாம் ஊட்டம் தருவனவா? இல்லை, நாம் உண்ட வற்றில் நம் உடல் உறுப்புகள் உறிஞ்சி எடுத்துக் கொள்ளும் அளவே ஊட்ட அளவாகும்.
- பட்டுணி (பட்டினி) என்பது உண்ணா நோன்பு ஆகாது. உணவு கிடையாமல் இருப்பது பட்டுணி. உணவு இருக்கும் போதுதன் கொள்கை கருதி உண்ணாமல் இருப்பது உண்ணா நோன்பு. முன்னது உடல் நலிவுக்கு ஆட்படுத்துவது. பின்னது உடலோடு உள்ளத்தின் வலுவுக்கும் ஆளாக்குவது.
- உயிர் வாழ்வுக்காக உணவா? உணவுக்காக உயிர் வாழ்வா? உயிர் வாழ்வுக்காகவே உணவு என்று உணர்ந்து உட்கொண்டு வாழ்பவர் உயிரியல் உடலியல் வாழ்வியல் உலகியல் எனப்பலவும் அறிந்தவர். உணவுக்காகவே உயிர் வாழ்வு என்று வாழ்பவர், உணவியலும் அறியார்; உயிரியலும் அறியார்; வாழ்வியல் பற்றியும் அறியார். அவரே 'மடையர்' (மடை – சோறு) எனப் பழிக்கப்பட் டார்; ஊணர் எனவும் உரைக்கப்பட்டார்.
- உண்ணா நோன்பு இருந்தவர் உடனே வழக்கமான உணவுக்கு வராமல்சாறு கஞ்சி பருகிக் கால் வயிற்றுணவு அரைவயிற்றுணவு எனப் பழைய நிலைக்கு வருதல் வேண்டும்.
- ஊட்டமாக மாறும்போது எந்த உணவு எரிவோ, கிளர்ச்சியோ, வலியோ, வெறியுணர்வோ, மயக்கமோ தாராதோ அவ்வுணவே இயற்கை உணவு, பொருந்திய உணவு.

- செரிமான உறுப்புகளுக்கு மிகுந்த வேலை தாராமை, எளிதாகச் செரித்தல், உரிய ஊட்டம் தருதல் என்னும் மூன்றும் நல்ல அல்லது ஏற்ற உணவின் தன்மைகள் ஆகும்.
- பொய்யை மலச்சிக்கலுக்கு ஒப்பாகக் கூறினார் காந்தி யடிகள். தீயவற்றுக்கு எல்லாம் அடிப்படைத் தீமையானது பொய் கூறல். அதுபோல் நோய்ச்சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை மலச்சிக்கல் "கழிபேரிரையான்கண் நோய் நிற்கும்" என்றார் திருவள்ளுவர்.
- உணவால் நோய் நீக்குவது இயற்கைமுறை; தீய பின் விளைவு ஆக்காத முறை. மருந்தால் நீக்கும் முறை சிறு துயரை அப் பொழுதில் நீக்கிப் பெருந் துயரைப் பின்னுக்கு ஆக்குமாறு முன்னேற்பாடு செய்யும் முறையே. மருந்துகள் என்பவை பெரும் பாலும் பின்விளைவு செய்யாதவையாக இருப்பதில்லை.
- விலங்குகளுக்கு நோய் வந்தால் அவை தீனி உண்ப தில்லை; நீர் பருகுவது இல்லை. அசைபோடாதிருத்தலே அவற்றின் நோய்க் குறி. அக் கட்டுப்பாடு மாந்தர்க்கு இருப்பின் பெரும்பாலான நோய்களுக்கு மருந்தே வேண்டியிராது.
- நோய் நீங்குதல் என்பதுஉடலில் உள்ள வேண்டாத பொருளை வெளியேற்றுதல் என்பதேயாம். வேண்டாப் பொருளை வெளி யேற்றுவதற்குச் செலுத்தப்படும் பொருளே வேண்டாப் பொருளாக இருந்தால் 'அதனை 'நீக்க' 'நீக்க' எனத் தொடர் நிகழ்ச்சி தானே மருந் துண்ணல்.'
- உடல் நம் கருத்தை இழுக்காமல் தன் கடமையைப் புரிந்து கொண்டிருக்கும் அளவும் நமக்கு நோயில்லை என்பது பொருள்.
- உடல் நம் கருத்தை இழுக்காமல் தன் கடமையைப் புரிந்து கொண் டிருக்க வேண்டும் எனின், அது நம்மை இழுத்து நினைவூட்டா வகையில் நாமே நினைந்து உடல் நலம் போற்றிக் கொள்ளல் வேண்டும்.
- 'ஊனுடம்பு ஆலயம்' என்பது புறத் தூய்மையும் அகத் தூய்மையும் போற்றப் பட வேண்டியதன் இன்றியமை யாமையைக் குறிப்ப

தாகும். 'புறம் தூய்மை நீரான் அமை யும் அகம் தூய்மை வாய்மை யாற் காணப்படும்' என்பது வள்ளுவம்.

- உண்ணும் 'உணவு'க்கும் கொள்ளும் 'உணர்வு'க்கும் தொடர் புண்டு என்பதை ஆராய வேண்டுவதில்லை. சொல்லமைதியே வெளிப்படுத்திவிடும்.
- உடலில் உள்ள அழுக்கைப் போக்க உள்ளும் புறமும் தூய்மை போற்றல் வேண்டும். அதனைச் செய்தால் தீய நுண்ணுயிரிகள் உருவாகா. உருவானாலும் தூய்மை போற்றுதலால் அவை தங்கா. வீடு தூய்மையாக இருப்பின் ஈயும் கொசுவும் இராவே; அதுபோல்.
- தீய நுண்ணுயிரிகளை அழிக்க நஞ்சு கலந்த மருந்துகளை உண்பது, தூய்மை குறைந்த வீட்டைக் கூட்டித் துடைத்துத் தூய்மை செய்வதற்கு மாறாகத் தீயூட்டி எரிப்பது போன்றது.
- நோய் என்பது நம் நெறியை ஒழுங்குபடுத்திக் கொள்ளுமாறு முன்னறிவிப்புச் செய்யும் தூதன்; அறிவுறுத்தும் ஆசான்; தீமையை வெளியேற்றி நலம் செய்யும் துப்புரவாளத் தொண்டன்; நோய், நம் பகை அன்று; நண்பு!
- நோய் படிப்படியாய் வளர்ந்தது போலப் படிப்படியாகத் தீர்தலே இயற்கை ஒழுங்கு. நெடிய நோய் நொடியில் தீர்ந்தால், அதன் தீர்தல் வேறொரு தீராப் பெருங்கேடாக உருக் கொண்டுளது என்பது பொருள்.
- 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்னும் கொள்கையை உருவாக்கியவர் கீப்போ கீரீடிசு என்பார். ஈராயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர். தொல் பழநாள் சித்தர், உண வும் மருந்தும் ஒன்றெனக் கண்டதே சித்த மருத்துவம் எனப்படும் தமிழ் மருத்துவம்.
- இயல்பு உணவு; சுவையுணவு; ஊக்கு உணவு என உணவை மூவகைப்படுத்தலாம். இம் மூவகையும், மூவகை உணர்வுகளுக்கு அடிப்படையானவை.
- முதல்வகை காய்கனி இலை கிழங்கு முதலிய இயற்கை உணவு; தூயது; தீமை இல்லது.

- இரண்டாம் வகை அரைமமும் (மசாலையும்) சேர்ப்புகளும் கூடியவை; தீயது; நோயாக்குவது; இது.
- மூன்றாம் வகை கெட்டுப்போனவையும் வெறி மயக்கேற்று வனவு மாம். இது மிகு தீயது; மாந்த நிலையை அழிப்பது.
- அடுப்பிலே வேக வைக்கும் எவ்வுணவையும் கொள்ளாமல் தன் இயல்பிலேயே உண்ணத்தக்க பழவகை காய்கள் ஆகியவற்றையே உண்பதும் அத்தகைய குடிநீர் வகைகளையே குடிப்பதும் இயற்கை உணவுக் கொள்கையாகும். பயறு வகைகளில் சிலவற்றை நீரில் முளைப்பூரச் செய்து உண்பதும் இவ்வகையினதே.
- **இயற்கை உணவை** மேற்கொள்வோர் படிப்படியாக மேற்கொள்ள லாம். இரவு ஒரு வேளைக்கு மட்டும் இயற்கை உணவை உண்டு பழக்கப்பட்டபின்,காலை உணவையும் அவ்வகையிலே மாற்றிக் கொள்ளலாம். பின்னர் நண்பகல் உணவையும் அவ்வாறு மேற்கொள்ளலாம்.
- "நமக்காக உணவே அன்றி உணவுக்காக நாம் அல்லர்" என்னும் ஒழுக்கநெறியைச் சிக்கெனக் கொள்வார்க்கு இயற்கை உணவு நெறி இயல்பாகிப் போதல் கண்கூடு. இத்தகையர் தமக்கு உண்டாம் நோய்களையும் இயற்கை உணவுகளாலும், மண், நீர், காற்று, வெயில் என்னும் இயற்கைப் பொருள்களாலும் நீக்கிக் கொள்ளுதலும் நாம் காண்பதேயாம்.
- காலைக் கடன்களை முடித்து நீராடிவிட்டுத் துளசியின் இலைகள் ஐந்தாறு பறித்து நாள்தோறும் தின்றால் நரை திரையின்றி நெடுநாள் வாழலாம்.
- துளசிச் சாறு சிறிது எடுத்து வெற்றிலையில் விட்டுத் தேன் சேர்த்துக் குழப்பிக் குழந்தைக்குக் கொடுத்தால் வாந்தி நின்றுவிடும்.
- துளசிச் செடியின் பூக்கதிரை எடுத்துச்சட்டைப்பையில் வைத்து அதனைஅணிந்து கொண்டால் மூச்சுக்குழல் நுரையீரல் தொடர்பான நோய்கள் நீங்கும்.
- துளசியிலை சுக்கு நாட்டுச்சருக்கரைக் கழாயம் (கசாயம்) பருகினால் காய்ச்சல் நீங்கும்.

- துளசி இலையையும் சிறிதளவு சுக்கையும் சேர்த்து அரைத்து வாயில் போட்டு விழுங்கிவிட்டுச் சிறிதளவு வெந்நீர் குடிக்கத் தடுமம் நீங்கும். மூன்று வேளை மருந்து போதுமானது.
- கருந்துளசி இலைகளைப் பறித்துத் தலையணைமேல் பரப்பி வெள்ளைத் துணியால் மூடி, அதில் தலை வைத்துப் படுத்துக் கொண்டால் ஒரு மணிப்பொழுதளவில் தலைப்பேன்கள் உதிரும்; செத்துப் போகும்; மூன்று நாள் இவ்வாறு செய்யப் பேன் தொல்லை தொலையும்.
- கருந்துளசிச் சாற்றையும் வெற்றிலைச் சாற்றையும் சமமான அளவில் கலந்து படை எனப்படும் பற்றின்மேல் காலை மாலை இருவேளைகளும் கனமாகத் தடவினால் பற்று நோய் ஒழியும்.
- வேப்பங்கொழுந்தை ஒரு பாக்களவு திரட்டி நாள்தோறும் காலையில் சாப்பிட்டால் பித்தமயக்கம் வாராது. வேப்பம்பூச்சாறும் (இரசமும்) வேப்பம்பூத் துவையலும் பித்த மயக்கத்தை இல்லாமல் ஆக்கும்.
- வேப்பிலையை நன்றாக வேகைவைத்து வீக்கம் உள்ள இடத்தில் கனமாக வைத்துக் கட்டினால் வீக்கம் அகலும்.
- வேப்பம்பருப்பை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து, சொறிசிரங்கு மேற்பூசி உலரவைத்து அரைப்பு சீயக்காய் தேய்த்துக் குளித்தால் நீங்கும்.
- புழுவைத்த புண் எனினும், வேப்ப எண்ணெய் தடவிய பஞ்சை வைத்துக் கட்டிவர ஆறும்.
- கடுகை நன்றாக அரைத்துப் பொடியாக்கித் தேனுடன் கலந்து இரண்டுவேலை உண்ண இருமல் குணமாகும்.
- மூலநோயினர் புலால் உண்ணுதல் ஆகாது. உண்ணின் எம்மருந்தாலும் மூலநோய் தீராது.
- உணவுமுறையை ஒழுங்குபடுத்திக் கொண்டால் மருந்து இல்லாமலும் நோய் நீங்கிவிடும். உணவு முறை ஒழுங்குபடாமையால் எத்தனை வகை மருந்துகளை உண்டாலும் நோய் தீர்வது இல்லை.

- உடல் தன்னைத் தானே தூய்மையாக்கிக் கொண்டு காத்துக் கொள்ளவல்ல இயற்கையான அமைப்பை உடையது. நம் உணவும் செயல்களுமே அவ்வுடலின் ஆக்கச் செயற்பாட்டைக் கெடுத்து விடுகின்றன.
- **தேங்காயும் இளநீரும்**, பயன்மிக்க இயற்கை உணவுகள். கழிவுகளை அகற்றுதல், எளிதில் செரித்தல்; உடலைத் தண்மை யாக்கல் ஆகிய நலங்களைச் செய்யும். மூச்சிளைப்பு, சிறுநீரகக் கேடு, என்புருக்கி முதலியவற்றுக்கு நன்மருந்து.
- **வாழைப்பழம்** தவச உணவு போன்றது; ஊட்டம் தருவது; மலநீக்கி; குடல்கோளாறுகளை நீக்குவது.
- **பேரிச்சை,** நரம்புத்தளர்ச்சியை அகற்றும்; ஆண்மை பெருக்கும்; குடல் கோளாறுகளை அகற்றும்; குருதியைப் பெருக்கும்.
- **திராட்சை,** அரத்த அழுத்தத்தைப் போக்கும்; அரத்தத்தைத் தூய்மையாக்கும்; சளி, மூச்சிளைப்பு, வயிற்றுக் கடுப்பு ஆகியவற்றைத் தீர்க்கும். (அரத்தம் – இரத்தம்)
- **ஆரஞ்சு,** கண்பார்வைக்கும் செவிக் கூர்ப்புக்கும் பற்காப்புக்கும் உதவும். சிறுநீரகத்தின் செயற்பாட்டுக்கு உதவுவதுடன் கெடுதல்களையும் அகற்றும்
- **ஆப்பிள்,** குருதி வளமாக்கும். கல்லீரலிலும்,சிறுநீர்ப் பையிலும் கல் தங்காமல் தடுக்கும். வயிற்றுக் கடுப்பு காய்ச்சல் வராமல் தடுக்கும்.
- **மாதுளை,** உடல் வெப்பை அகற்றும்; வாந்தியை ஒழிக்கும்.
- **தக்காளி,** அரத்தத்தைத் தூய்மையாக்கி, மிகுவிக்கும். வயிற்றுப்புண், மலச்சிக்கல், தடுமம் ஆகியவற்றை நீக்கும்.
- **வெள்ளரி,** செரிப்புமிக்கது. வெள்ளரிச் சாற்றை முகத்தில் பூசினால் பரு, கட்டி, புள்ளி முதலியவை அகலும். வெள்ளரி வித்தை அரைத்துக் குடித்தால் சிறுநீரகச் செயற்பாடு சிறக்கும்.
- **நெல்லி,** நல்ல ஊட்டமுடையது; தளர்வை நீக்கும்; பல்நோய், தோல்நோய்களை நீக்கும். அரத்தத்தைத் தூய்மையாக்கும். சளி, இருமல்களைப் போக்கும்.

- **எலுமிச்சை**, வாந்தி, பித்தம், மயக்கம், சூடு அகற்றும். எலுமிச்சஞ் சாற்றைத் தடவினால் சொறி சிரங்கு நீங்கும்.
- **ஈர வெண்காயம்**, (ஈரவுள்ளி), மூலக்கடுப்புக்குச் சிறந்த மருந்து. அரத்தத்தூய்மி; சளித் தடுப்பி; இதன் சாற்றைத் தடவினால் தேனீ, தேள் கடிகளின் வலி நீங்கும்.
- **வெள்ளைப் பூண்டு** சளித் தொல்லையை நீக்கும். உப்புதலை ஒழிக்கும்; மலம் இளக்கும்; சிறுநீர்ப் பையின் வேலையை ஒழுங்குபடுத்தும். படபடப்பு அகற்றும்.
- **அறுகம்புல் சாறு**, நச்சுகளை நீக்கும்; நல்ல ஊட்டம்; சாறு குடித்து மூன்று மணி நேர அளவுக்கு வேறு எதுவும் உண்ணாமை நன்று.
- **கொத்துமல்லி**, கறிவேப்பிலை, பொதினாக் கீரைகளை கறிவகைத் துணைப் பொருள்களாகவும், துவையலாகவும் பயன் படுத்துகிறோம். முன்னிரண்டையும் பச்சையாகவும் தின்னலாம்.
- **அறைக்கீரை**, அகத்திக்கீரை, தூதுவளைக்கீரை, ஆரைக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, மணித்தக்காளிக் கீரை ஆகிய வற்றை உண்ணுதல் பலவகை நலங்களைத் தரும். ஊட்டம், குருதிப் பெருக்கம், மலநீக்கம், தண்மை ஆகியவை உண்டாம்.
- **முருங்கைக் கீரைக்கு**, நரம்புத் தளர்ச்சி நீக்கும் ஆற்றல் உண்டு. கால்கை நடுக்கங் கண்டவரும் முருங்கைக் கீரையால் பழைய நலம் பெற்றுளர். கிழமைக்கு இரண்டு மூன்று முறை உண்ணல் நலம்.

"உடம்பை வளர்க்கும் உபா யம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

-திருமந்திரம்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்."

- நம்மறை

ooo

தாம் பிறந்த மண்ணையும் மண்ணின் மொழியையும்
மண்ணின் மைந்தரையும் மீட்டெடுப்புச் செய்து
மேன்மைப்படுத்துவதாகவும் விழாக்கள் சடங்குகள்,
ஆகியவை அமையவும் வேண்டும்.
இவற்றையெல்லாம் உள்நோக்கி உட்கொண்ட
உணர்வின் உந்துதலே தமிழ்நெறிக் கரணம் என்னும்
இச் சிறு சுவடியாம்

- இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சி மாவட்டம் - 620 101.